வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 15.08.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 248 பக்கங்கள் : 16




### சமஷ்டி தீர்வே சாத்தியம்!

## 13ஐ முழுமையாக அமுலாக்கி மாகாண தேர்தலை நடத்துக!

### ஜனாதிபதிக்கு தமிழரசு கட்சி கடிதம்!

யாழ்ப்பாணம், ஓக. 15

“சமஷ்டி கட்டமைப்பிலேயே அர்த்த முள்ள எந்தத் தீர்வும் சாத்தியம். இந்த நிலைப்பாட்டில் சமரசம் அல்லது விட் டுக் கொடுப்பு செய்து கொள்ளாமல் - அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்க ளையும் விரைவாக நடைமுறைப் படுத் தவும் - நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண

15

## அரசாங்க தரப்பிலிருந்து விரைவில் புதிய எதிரணி!

### பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அமைச்சரவைக்கும் இடையில் இணக்கப்பா டற்றதன்மை காணப்படு கிறது. வெகுவிரைவில் அரசாங்கத்துக்குள் புதிய எதிரணி ஒன்று தோற் றம்பெறும் என்று சுதந் திர மக்கள் சபையை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினருமான பேரா சிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்சியின் தலைமைப் பணிமனை யில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

நாடு வங்கு ரோத்து நிலை அடைந்துள்ள

15

### சோதனையில் 73 மருந்துகள் தோல்வி!

கொழும்பு, ஓக. 15

2023ஆம் ஆண் டில் இதுவரை மொத் தம் 73 மருந்துகள் தரப் பரிசோதனை யில் தோல்வியடைந் துள்ளன என்று சுகா தார அமைச்சின் மருத்துவ விநியோக பிரிவு தெரிவித்துள் ளது.

தர சோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில் 45 மருந்துகள் இந்தியாவில்

15

# ஜனாதிபதியை எதிர்ப்போம்!

## நாமல் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஓக. 15

பொருளாதார முன்னேற்றத்துக்காகவே ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவை தெரிவு செய்தோம். நாட்டுக்கு எதிரான அரசியல் தீர்மா னங்களை ஜனாதிபதி எடுத்தால் அதனை கட்சி என்ற ரீதியில் கடுமை யாக எதிர்ப்போம் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

### டிப்பர் மோதிய விபத்தில் பெண் நசியுண்டு மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 15

சமிக்ஞையை மீறி வீதியை கடக்க முயன்ற டிப்பர் முன்னே நின்ற மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கோப்பாய் சந்தியில் நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளரான நாவேந் தன் கௌரிமலர் (வயது 52) என்பவரே உயிரிழந் தார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதா வது,

மோட்டார் சைக்கிளில் வந்த தம்பதியர் கோப் பாய் சந்தியை அடைந்தபோது, தானியங்கி வீதி சமிக்ஞை சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்ததை அடுத்து சட்டத்தை மதித்து வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், அவர்களின் பின்னால் வந்த டிப்பர் வாகனம் வேகமாக வீதியை

15



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றபோது...!

## பெண்கள்மீதான வன்புணர்வு மன்னார் மாவட்டத்தில் உயர்வு

மன்னார், ஓக.15

2015ஆம் ஆண்டுக்கு பின்னர் 113 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்க ளும் 2018ஆம் ஆண்டுக்கு பின்னர் 31 வன்புணர்வு சம்பவங்களும் மன்னார் மாவட்டத்தில் இடம் பெற்றுள்ளன என்று அந்த மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனை தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூல மாக அறியப்பட்ட இந்த விடயம் தொடர் பில் மேலும் தெரிய வருபவை

15

### குருந்தூர்மலை ஆதிசிவனுக்கு வெள்ளிக்கிழமை பொங்கல்!

#### அனைவரையும் திரளுமாறு அழைப்பு

முல்லைத்தீவு, ஓக. 15

முல்லைத்தீவு - குருந் தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு பொங்கல் நடைபெறவுள் ளது.

நீதிமன்றின் அனுமதி யுடன் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதில் அனைவ ரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ள னர்.

கடந்த மாதம்

15

### செஞ்சோலை படுகொலை; நேற்று நினைவேந்தப்பட்டது!



யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலை படுகொலையின் 17ஆம் ஆண்டு நினை வேந்தல் வடக்கில் நேற்று திங்கட்கிழமை உணர்வுபூர்வ மாக முன்னெடுக்கப்பட்டது.

63 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட வள்ளி புனம் செஞ்சோலை வளாகம், யாழ்.

15



### இளைஞரை காணவில்லையென முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஓக. 15

நெடுந்தீவை சேர்ந்த இளைஞர் ஒருவர் தெப் பத்தில் சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார். அவர் காணாமல் போய் 4 நாட்கள் கடந்துள்ளன. இந்நிலையில், அவரை கண்டவர்கள் தகவல் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ள னர்.

நெடுந்தீவு கிழக்கை சேர்ந்த தம்பிப்பிள்ளை விதுசன் (வயது 26) என்ப வரே இவ்வாறு காணாமல்போ யுள்ளார். மனநலம் பாதிக்கப்பட்ட வரான இவர் கடந்த 10ஆம் திகதி மாலை தெப்பத்தில் ஏறிச் சென்றுள்ளார்.

கடந்த நான்கு

15

# இப்படியும் நடக்கிறது

அண்மையில், கனடாவில் நடைபெற்ற தமிழர் தகவல் விருதுவழங்கும் விழாவில் ஈழநாடு குழுமத் தலைவர் குக நாதன் சொன்ன குட்டிக் கதை ஒன்றுதான் இப்போது ஞாப கத்துக்கு வருகின்றது.

அவர்கள் இளம் காதலர்கள். இருவரும் திருமணம் செய்து கொள்வதற்கு இரு வீட்டிலும் சம்மதிக்கவில்லை. நீண்டகால மாக இரு வீட்டாரையும் சமாதானப்படுத்த எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை.

கடைசியில் இருவரும் தத்தமது வீட்டாருக்கு சொல் லாமல் வேறு நகரத்தில் சென்று வாழ்வது என்று முடிவெடுத்து விட்டனர்.

நமது பாஷையில் சொல்வ தானால், ஓடிப்போவதென்று முடிவெடுத்துவிட்டனர்.

இருவரும் திட்டமிட்டு ஒரு நாள் இரவு பெண்ணின் வீட்டில் வீட்டார் அனைவரும் தூங்கிய பின்னர் அங்கிருந்து அவர் வெளி யேறி காதலனுடன் காரில் தப் பிச் செல்வது என்று முடி வெடுத்து விட்டனர்.

காதலன் திட்டமிட்டவாறு காதலியின் வீட்டுக்கு அருகே காரில் வந்து காத்திருந்தார். காதலி சொல்லி வைத்ததுபோல் நள்ளிரவு வீட்டிலிருந்து வெளியே வந்து கார் நிற்கும் இடத்துக்கு வந்துசேர்ந்தார்.

நெஞ்சு படபடக்கக் காத்தி ருந்த காதலனுக்கு காதலி கார் நின்ற இடத்துக்கு வந்துசேர்ந்த போது, கையில் தூக்கமுடியாத பாரத்துடன் ஒரு பையுடன் வந்தது ஆத்திரத்தை ஏற்படுத்தி யது.

'உம்மை எல்லோ சொன்ன னான் உடுத்தின சீலையோட வாரும் எண்டு' என்று கடிந்து கொண்டார். அதற்கு காதலி சொன்னார்: 'இது எல்லாம் ஏற்கனவே உடுத்தின பழைய சீலைதானப்பா' என்று.

கடந்த வாரம் பாராளு மன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் இராவணனை சிங்களவர் என்று சரத் வீரசேகர கூறியது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கலாம். இராவ ணேஸ்வரன் என்று தமிழர்களால் அழைக்கப்படும் இராவணன் ஒரு சிவ பக்தன். அவனை சிங்கள வர்கள் தமது இனத்தவர் என்ற போது அதனைக் கேட்டுக் கொண்டிருந்த இந்த ஊர்க்குரு விக்கும் கோபம் வரத்தான் செய்தது. இதற்கு முன்னரும் ஒரு சிங்கள பெரும் வர்த்தகரை அவரின் அலுவலகம் இருந்த ஒரு நட்சத்திர ஹோட்டலில் சந்திக்க முடிந்தது. அந்த ஹோட்டலில் ஒரு மாடியில் உள்ள அறை முழு வதையும் வாடகைக்கு எடுத்து அவர் தனது தனிப்பட்ட அலு வலகமாகப் பாவித்து வருகின் றார். அங்கே நடுநாயகமாக இராவணனின் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்துவிட்டு, எதற்காக நீங்கள் இராவணனின் சிலையை இங்கே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது அவர் சொன்னார், 'சிங்களவர்களின் மூத்த மன்னன் ஒருவனின் சிலையை வைப்பது எனது கடமைதானே' என்றார். அவருடன் அந்த நேரத்தில் தர்க்கிக்க விரும்பவில்லை.

ஆனாலும் அவர் சொல்வதை அப்படியே கேட்டுக்கொண்டு வர மனம் இடம்தரவில்லை.

நான் கேட்டேன்: 'அவர் சிங்களவர் என்றால் மகாவம்சம் ஏன் அவரைப் பற்றி பேச வில்லை?' என்று. அதற்கு அவரிடம் பதில் இருக்கவில்லை.

இப்போது இந்தப் பத்தியில் சொல்லவருவது, இராவணன் தமிழரா சிங்களவரா என்பது பற்றியல்ல.

இராவணன் சிங்களவர் என்று சரத் வீரசேகர கூறியபோது இந்த ஊர்க்குருவிக்கும் கோபம் வந்தது என்று மேலே குறிப்பிட்டிருந் தேன்.

எனக்கே - அதாவது நேரலை ஒளிபரப்பில் அலுவலகத்திலி ருந்து கேட்டுக்கொண்டிருந்த எனக்கே அப்படியென்றால், அங்கு பாராளுமன்ற சபா மண்ட பத்தில் அதனைக் கேட்டுக் கொண்டிருந்த நமது எம்.பிக் களுக்கு எப்படி இருந்திருக் கும்?

அதுதானோ தெரியவில்லை, நமது சிவஞானம் சிறிதரன் எம். பி., இராவணன் சிங்களவரல்ல என்றும் அவர் தமிழன்தான் என வும் அடித்துக் கூறியதுடன், இராமாயணத்தை வால்மீகி எழுதிக்கொண்டிருந்தபோது, எழுத்தாணி உடைந்து போகவே பிள்ளையார் தனது தந்தத்தில் ஒன்றை உடைத்து கொடுத்து வால்மீகி எழுதினார் என்று தனக்கே உரிய பாணியில் உணர்ச்சியுடன் கூறினார்.

அவரது இந்த உரைதான் அதற்கு பின்னர் சமூகவலைத் தளங்களில் பேசு பொருளாகி யிருக்கின்றது.

ஓர் ஆசிரியராக இருந்தவர், எப்படி வரலாற்றை தவறாக பேசுவதா? இப்படித்தானா அவர் மாணவர்களுக்கு தவறாகக் கல்வி கற்பித்தார் என்றவாறாக சமூக வலைஞர்கள் கூக்குரலிடுவதை காணமுடிந்தது.

இராமாயணத்தை எழுதிய வர் வால்மீகி. மகாபாரதத்தை வியாசமுனிவர் சொல்லச் சொல்ல விநாயகர் (நம்ம பிள்ளையார்) எழுதியதாகவும், அவ்வாறு அவர் எழுதிக் கொண் டிருக்கும்போது எழுதுகோல் உடைந்துவிடவே அவர் தனது தந்தத்தில் ஒன்றை உடைத்து எழுதியதாகவும் வரலாறு சொல்கின்றது.

ஆனால், அதற்காக எந்தவித ஆயத்தமுமின்றி -

ஒருவரின் பேச்சுக்கு மறுப்பு வெளியிடுவதற்காக உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசிய ஒரு பேச்சை இப்படி விமர்சிக்க வேண்டுமா என்று கேட்கத் தோன்றியது.

ஆசிரியர் என்றால் அவர் எல்லா பாடங்களுக்கும் ஆசிரி யராக இருந்திருப்பார் என்ப தல்ல. ஒரு கணித ஆசிரியருக்கு வரலாறு தெரிந்திருக்காதது போல.

சிலவேளைகளில் இரண்டு படங்களை அடுத்தடுத்து பார்த்தால் எந்த சம்பவம் எதில் வரும் என்பது தடுமாறிவிடும். அதுபோல இரண்டு நூல்க ளையும் அவர் அடுத்தடுத்து படித்திருந்தாரோ என்னவோ?

**- ஊர்க்குருவி.**

# 13 ஐ அமுல்படுத்துவதற்கு முன் ஜனாதிபதித் தேர்தல் அவசியம்

## அபயதிஸ்ஸ தேரர் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 15

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவ தற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண் டும் என பேராசிரியர் வண. மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் உரை யாற்றும் போதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்-

ஜனாதிபதித் தேர்தலை அறிவித்து, 13ஆவது திருத் தத்தை முழுமையாக அமுல் படுத்துவதற்கான ஆணையை மக்களிடம் கோருங்கள். அதற் கான ஆணையை வழங்க மக்கள் தயாராக இருந்தால், அதனை நடைமுறைப்படுத்து வதற்கு ஜனாதிபதிக்கு அதி காரம் உள்ளது.

தற்போது மக்கள் வழங்கி யுள்ள ஆணையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவ் வாறான அதிகாரம் இல்லை.

அதேபோன்று தற்போ தைய அரசாங்கத்திற்கும் அவ்வாறான ஆணை எதுவும் இல்லை. கோட்டாபய ராஜ பக்ஷவுக்கே மக்கள் ஆணை வழங்கப்பட்டது-என்றார்.





பண்டத்தரிப்பு - வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றம் நடத்திய சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டபோது பதிவான படங்கள்.

# வெளிநாட்டிலிருந்து மருத்துவர்களை நாட்டுக்கு அழைக்க வேண்டிய நிலை!

## விசேட மருத்துவர் அசோக



கொழும்பு, ஓக. 15

மருத்துவர் பற்றாக்குறை தொடருமானால் வெளி நாட்டு மருத்துவர்களை இந் நாட்டுக்குக் கொண்டு வர வேண்டிய நிலை ஏற்படலாம் என விசேட மருத்துவர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சா ளர் மருத்துவர் அசோக குணரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் விதித்துள்ள அதிக வரிகள் மற்றும் நாட் டில் தற்போது நிலவும் ஸ்திர மின்மையே மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறு வதற்கு முக்கிய காரணம் எனவும், மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறு வதால் மருத்துவமனைகள் நெருக்கடியை எதிர்கொள்வ தாகவும் குணரத்ன தெரி வித்துள்ளார்.

மருத்துவர்களின் எண் ணிக்கை குறைவடைந்த நிலையில் இருவர் இருந்த இடத்தில் ஒருவரையும் அல லது மூவர் இருந்த இடத்தில் இருவரையும் வைக்க வேண் டிய நிலை ஏற்படும் என விசேட மருத்துவர் அசோக குணரத்ன தெரிவித்தார். (ஐ)

# செஞ்சோலை மாணவர் கொலை; யாழில் முன்னணியினர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலையில் விமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்க ளின் நினைவேந்தல் நேற்று யாழ்ப்பாணத்தில் நினை வேந்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நூல் நிலை யம் முன்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட் டது.

இந்த நிகழ்வில் படு கொலை செய்யப்பட்ட மாணவர்களின் உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# குடும்பத் தகராறில் தந்தை படுகொலை!

கொழும்பு, ஓக. 15

கேகாலை - எட்டியாந் தோட்டை பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட எக்லாஸ் தோட்டத்தின் கீழ் பிரிவில் ஒருவர் கொலை செய்யப் பட்டார்.

இரு குழுக்களுக்கிடை யில் ஏற்பட்ட குடும்பத் தக ராறில் 3 குழந்தைகளின் தந்தை உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சகோதர ரின் மகளின் காதல் விவகா ரத்தாலேயே மோதல் ஏற்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் கரவனெல்லை ஆதார மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# அலங்கார திருவிழா!

வடமராட்சி, ஓக. 15

அல்வாய் கிழக்கு தேவ லத்தைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மண வாளக் கோல தின அலங் கார திருவிழா நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. இதில், சப்பை ரதத் திருவிழா எதிர் வரும் 20ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமையும் தேர்த் திருவிழா 21ஆம் திகதி திங் கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன.

பெருந்திருவிழா நெல்லி யடி சமஸ்தானத்தைச் சேர்ந்த பிரம்மசிறீ திலகேஸ் வரக் குருக்கள் பிரதமகுரு வாக இருந்து நடத்தி வரு கின்றார். (ஐ-02)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
15.08.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநுர கூறும் அரசியல் யுத்தம்

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல்தான் இந்த நாட்டின் வரலாற்றில் இடம்பெறவுள்ள அரசியல் யுத்தமாக இருக்குமென்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்திருக்கின்றார். அநுர இவ்வாறானதொரு கருத்தை எவ்வாறானதோர் அர்த்தத்தில் கூறுகின்றார் - எதனை மனதில் வைத்துக் கூறுகின்றார் என்பது அவருக்கு மட்டுமே புரிந்திருக்கும். ஆனால், இந்தக் கூற்றை நாம் பல கோணங்களில் ஆராயலாம்.

கோட்டாபயவின் சிங்கள - பௌத்த எழுச்சி 'அறகலய'வால் வீழ்த்தப்பட்டது. பொருளாதார நெருக்கடியின் விளைவால்தான் கோட்டாபய ராஜபக்ஷ வீழ்த்தப்பட்டார் என்றாலும்கூட கோட்டாபயவின் வீழ்ச்சியானது இலங்கையின் - குறிப்பாக தென்னிலங்கையின் அதிகார அரசியலில் பெரும் உடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. எவருமே எதிர்பாராத வகையில் ஓர் ஆசனத்துடன் முடங்கிக் கிடந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். இந்த நிலையில், அவர் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதா அல்லது அரசியல் அரங்கிலிருந்து வெளியேறுவதா என்னும் கேள்விக்கான பதிலாகவே அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் அமையவுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ரணில் விக்கிரமசிங்கவுடன் மோதவுள்ள வேட்பாளர்கள் யாரென்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. அநுரகுமார திஸநாயக்கவின் கூற்றை உற்றுநோக்கினால் ஜனாதிபதி தேர்தலானது நாட்டை ஓர் அரசியல் யுத்தத்துக்குள் தள்ளப் போகின்றது!

அவ்வாறாயின், அரசியல் சூழலை அரசியல் யுத்தமாக மாற்றுமளவுக்கு வெளித்தலையீடுகள் இடம்பெறுமா என்னும் கேள்வி எழுகின்றது. ஏனெனில், எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்கூட இந்திய - அமெரிக்க - சீன முத்தரப்பு வியூகங்களுக்குள் நாட்டின் அரசியல் அதிகாரம் சிக்கியிருக்கின்றது. இதில், இந்திய -அமெரிக்க நகர்வுகள் என்பது ஓரணியாகவே இருக்கும். இந்தியாவின் அயல்நாடுகளில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருகின்ற நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் ஒரு நேர்கோட்டில்தான் பயணிக்கின்றது.

உலகளவில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தும் நகர்வுகளில் தீவிரம் காண்பித்துவரும் சீனா தனது செல்வாக்கை தக்கவைப்பதற்கான உத்திகள் தொடர்பில் பலவாறான நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதில் பிரதானமானது சிறிய நாடுகளின் அரசியல் அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் தரப்புகள் மத்தியில் தனது செல்வாக்கை அதிகரிப்பது. இந்த பின்புலத்தில் நோக்கினால் இலங்கையின் அரசியல் அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல் உயரடுக்கு ஒன்றை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வது சீனாவை பொறுத்தவரையில் இன்றியமையாதது.

அவ்வாறாயின், அவர்களுக்கு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் முற்றிலுமாக இந்தியாவின் அமெரிக்காவின் கையை ஓங்குவதை தடுக்க வேண்டிய தேவைப்பாடு உண்டு. இந்த பின்புலத்தில் இந்திய - அமெரிக்க நகர்வுகளுக்கு சமாந்தரமாக சீனாவும் நிச்சயம் அரசியல் கட்சிகளை கையாள முற்படும். ஒரு வேளை, இதனைத்தான் அநுரகுமார திஸநாயக்க அரசியல் யுத்தமென்று கூறுகின்றார் போலும்.

# யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையங்களில் தமிழ் பெண் பொலிஸார் பற்றாக்குறை!

## சிறுவர், பெண்கள் அபிவிருத்தி கூட்டத்தில் சுட்டிக்காட்டு

*யாழ்ப்பாணம், ஓக. 15*

*யாழ்ப்பாணத்தில் சில பொலிஸ் நிலையங்களில் தமிழ் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யச் செல்லும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.*

*யாழ். மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர், பெண்கள் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.*

*யாழ். பிராந்திய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் பிரிவு இயங்கி வருகிறது. இந்தப் பிரிவில் பௌதிக வளங்கள் இருந்த போதிலும் ஆளணி பற்றாக்குறை நிலவுவதால் சிறு குற்ற விசாரணைப் பிரிவே பெண்களின் முறைப்பாடையும் விசாரணை செய்வதால் முழுமையான சேவை கிடைப்பதில்லையென பொது மக்கள் குறைபாடு தெரிவிக்கின்றனர்.*

*இது தொடர்பாக பல் வேறு தடவைகள் பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டிய போதிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.*

*இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து விரைவாக நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் இதன்போது உறுதியளித்தார். (ரி)*

# பண்டகைப் பிள்ளையார் இரதத் திருவிழா விமரிசை

*வடமராட்சி, ஓக. 15*

*உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் ஆலய தேர் திருவிழா நேற்று திங்கட்கிழமை மதியம் வெகு விமரிசையாக இடம்பெற்றது.*

*ஆலய பிரதம குருவான சேவற்கொடியோன் தலைமையில் காலையில் ஆரம்பமான அபிஷேகம், ஆராதனைகளை தொடர்ந்து வசந்தமண்டப பூசை இடம்பெற்று பிள்ளையார் உள்வீதியுலா வலம் வந்தார்.*

*தொடர்ந்து, நண்பகல் 12 மணியளவில் தேரில் ஆரோகணித்தார்.*





*ஆண், பெண் பக்தர்கள் இரு பக்கமும் நின்று வடம் பிடித்து தேரை இழுத்தனர்.*

*12.30 மணியளவில் தேர் இருப்பிடத்துக்கு வந்ததைத் தொடர்ந்து விசேட தவில், நாதஸ்வர கச்சேரி நடைபெற்றது.*

*பக்தர்களின் தாக சாந்திக்காக கோயில் நிர்வாகத்தின் எற்பாட்டில் சர்பத் வழங்கப்பட்டது.*


*மதியம் 1.30 மணியளவில் பீடத்தில் வைத்து பச்சை சாத்தப்பட்டு பிள்ளையார் தேரிலிருந்து அவரோகணித்தார்.*

*இதனைத் தொடர்ந்து 108 சங்காபிஷேகத்துடன் பிராயச்சித்த அபிஷேகமும் பஞ்சமுக அர்ச்சனையும் நடைபெற்றது.*

*தொடர்ந்து பெருந்திருவிழாவை முன்னிட்டு தினமும் நடைபெறும் அன்னதானமும் நடைபெற்றது.*

*தேர்த் திருவிழாவை முன்னிட்டு உள்நாட்டில் இருந்து மட்டுமல்ல வெளிநாட்டில் இருந்தும் குறிப்பிடத்தக்களவான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். வாகன வசதிப் பெருகும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**

குடும்பத்தில் ஆதர்வு பெருகும். குடும்பத்தின் பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். நினைத்ததை முடிக்கும்நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பணிகளை முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகு.

**சிம்மம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்து போவது நல்லது. யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்ய வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**கன்னி**

திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். மதிக்கப்படுவீர்கள். இனிமையான நாள்.

**துலாம்**

சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுங்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**விருட்சிகம்**

உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வரவேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள்.

**மகரம்**

பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மேலதிகாரி ஒத்துழைப்பார். வெற்றி கிடைக்கும் நாள்.

**கும்பம்**

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மீனம்**

குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.

# இந்திய சுதந்திர தினம் இன்று; தமிழகத்தில் பாதுகாப்பு உயர்வு

சென்னை, ஓக. 15

இன்று இந்தியாவின் 76ஆவது சுதந்திர தினமாகும். இதை முன்னிட்டு சென்னையில் மட்டும் 9 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சுதந்திர தினமான இன்று சென்னையில் உள்ள கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலின் கொடியேற்றுகிறார். இதையடுத்து அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்பார்.

இதனிடையே, பேருந்து, ரயில் நிலையங்கள், விமான நிலையம் என மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை விமான நிலையத்தில் பயணிகள் தீவிர பரிசோதனைக்குப் பிறகே அனுமதிக்கப்படுகின்றனர்.

சென்னை மாநகரில் ஆங்காங்கே சாலைத் தடுப்புகள் அமைக்கப்பட்டு தீவிர வாகன சோதனையும் நடைபெறுகிறது. தமிழகம் முழுவதும் சுமார் 40 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

## நீட் பரீட்சையை இரத்து செய்ய மறுத்ததன் எதிரொலி!

# தமிழ்நாடு ஆளுநரின் விருந்தை புறக்கணிக்கின்றன கட்சிகள்!

சென்னை, ஓக. 15

நீட் பரீட்சை விவகாரத்தில் ஆளுநரின் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து சுதந்திர நாளன்று ஆளுநர் அளிக்கும் தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக முதல்வர் ஸ்ராலின் அறிவித்துள்ளார். அத்துடன், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளும் விருந்தைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

நீட் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டும் நிகழ்வில் நீட் பரீட்சையை இரத்துச் செய்யும் தீர்மானத்தில் ஒருபோதும் கையொப்பமிட மாட்டேன் என்று தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி கூறினார்.

இதற்கு அரசியல் தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் சுதந்திர நாள் விழாவையொட்டி ஆளுநர் மாளிகையில் நடைபெறவுள்ள தேநீர் விருந்தைப் புறக்கணிப்பதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் ஆளுநர் தரும் தேநீர் விருந்தை புறக்கணிக்கின்றனர் என்று அந்த கட்சியின் சட்டப்பேரவை குழுத் தலைவர் செல்வப் பெருந்தகை அறிவித்துள்ளார்.

இதுபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் முத்தரசனும் ஆளுநரின் தேநீர் விருந்தை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளார்.

(ஐ)

# நீட் பரீட்சையை இரத்து செய்வதற்கு தி. மு. க. அழுத்தம் கொடுக்கவில்லை

**எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி**

சென்னை, ஓக. 15

“தமிழகத்தில் கூட்டணியுடன் கூடிய 38 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள தி. மு. க. இதுவரை ஒருமுறை கூட நீட் நுழைவுத் பரீட்சையை இரத்து செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பாராளுமன்ற மக்களவையை ஒத்திவைக்கும் அளவுக்கு மத்திய அரசுக்கு அழுத்தம் தரவில்லை” என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த செல்வசேகர் என்பவருடைய மகன் ஜெகதீஸ்வரன் நீட் தேர்வு தோல்வியால் தற்கொலை செய்தார். தனது மகன் இறந்த துக்கம் தாளாமல் அவரது தந்தை செல்வசேகரும் தற்கொலை செய்துள்ளார் என்ற செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த, தற்போதைய பொம்மை முதல்வர் ஸ்டாலினும், அவரின் அருமைப் புதல்வரும் தேர்தல் சமயத்தில், எப்படியாவது தமிழகத்தில் ஆட்சிப் பீடத்தில் அமர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளை அளித்து பின்புற வாசல் வழியாக ஆட்சியைப் பிடித்தனர். அதில் ஒன்றுதான் ஹநீட் இரத்து” என்ற போலி வாக்குறுதி.

தமிழகத்தில் கூட்டணியுடன் கூடிய 38 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள தி. மு. க., இதுவரை ஒருமுறைகூட நீட் நுழைவு தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பாராளுமன்ற மக்களவையை ஒத்திவைக்கும் அளவுக்கு மத்திய அரசுக்கு அழுத்தம் தரவில்லை. நீட் தேர்வு என்ற ஒன்றை வைத்து பலரின் உயிரோடு விளையாடி வரும் இந்த நிர்வாகத் திறமையற்ற ஆட்சியாளர்கள், இன்னும் எத்தனை உயிர்களைத்தான் பலி வாங்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும், பொய் பேசி ஏமாற்றும் வித்தையை விட்டுவிட்டு, இனியாவது நீட் தேர்வை இரத்து செய்வதற்கு சட்ட வல்லுநர்களைக் கலந்தாலோசித்து, அதற்கு உண்டான வழிமுறைகளை செயல்படுத்த முதல்வரை வலியுறுத்துகிறேன்” என்றுள்ளது.

(ஐ)

# மீனவர் மாநாட்டை நடத்த தி. மு.கவுக்கு தகுதியில்லை

**பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை**

தூத்துக்குடி, ஓக. 15

மீனவர் மாநாட்டை நடத்த தி. மு. கவுக்கு தகுதியில்லை என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு பா. ஜ. க தலைவர் அண்ணாமலை ‘என் மண் என் மக்கள்’ என்ற பெயரில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார்.

நேற்று தூத்துக்குடி சட்டப் பேரவை தொகுதியில் நடைபயணம் மேற்கொண்ட அவர் பேசியவை வருமாறு,

தூத்துக்குடியில் ஸ்மார்ட் சிற்றி திட்டத்தில் ரூ.620 கோடியில் பணிகள் முடிவடைந்துள்ளன. ரூ.441 கோடியில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மத்திய அரசின் திட்டங்களை தடுக்கும் வேலைகளை கனிமொழி எம். பி. செய்கிறார். அவரை தூத்துக்குடி தொகுதிக்கு உள்ளேயே அடைத்து விட்டார்கள். இதனால் ஏற்பட்ட கோபத்தை மத்திய அரசு மீது அவர் காட்டுகிறார். தி. மு. க. சார்பில் இராமேஸ்வரத்தில் இம்மாதம் மீனவர்கள் மாநாடு நடத்துகின்றனர்.

மீனவர்களுக்கு எந்த திட்டத்தையும் செய்யாத இவர்கள் எப்படி மீனவர் மாநாட்டை நடத்த முடியும்? கடந்த 2004 முதல் 2014 வரை காங்கிரஸ் ஆட்சியில் 81 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதனை பிரதமர் மோடி முழுமையாக தடுத்துள்ளார்.

திமுக தேர்தல் அறிக்கையில் கூறியதுபோல மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்படவில்லை. மீன்பிடிதடைக்கால நிவாரணம் ரூ.8,000, புதிய மீன்வளக் கல்லூரி என பல திட்டங்களை அறிவித்தார்கள். ஆனால், எதையும் கொண்டுவரவில்லை - என்றார்.

(ஐ)

# இலங்கையில் உச்சத்தை தொட்டுள்ள வெப்பநிலை

## வறட்சியால் 171,781 பேர் பாதிப்பு

கொழும்பு, ஓக. 15

**நாட்டில் நிலவும் கடும் வறட்சியுடனான காலநிலையால் 13 மாவட்டங்களில் 51ஆயிரத்து 641 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 71ஆயிரத்து 781 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலேயே அதிக பாதிப்புகள் பதிவாகியுள்ளன. குறிப்பாக, வறட்சியால் அதிக பாதிப்புகளைச் சந்தித்துள்ள யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரத்து 999 குடும்பங்களைச் சேர்ந்த 70ஆயிரத்து 238 பேர் குடிதண்ணீர் உள்ளிட்ட பல்வேறு அசௌ கரியங்களை எதிர்நோக் கியுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

இரத்தினபுரியில் 4ஆயிரத்து 39குடும்பங்களைச் சேர்ந்த 14ஆயிரத்து 116 பேரும் திருகோணமலையில் 02 ஆயிரத்து 320 குடும்பங்களைச் சேர்ந்த 07ஆயிரத்து 737 பேரும் மட்டக்களப்பில் 08ஆயிரத்து 892 குடும்பங்களைச் சேர்ந்த 29ஆயிரத்து 508 பேரும் அம்பாறையில் 07ஆயிரத்து 739 குடும்பங்களைச் சேர்ந்த 25ஆயிரத்து 891 பேரும் புத்தளத்தில் 60 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேரும் குருணாகலில் 833 குடும்பங்களைச் சேர்ந்த 02ஆயிரத்து 575 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், யாழ்ப்பாணத்தில் 21ஆயிரத்து 999 குடும்பங்களைச் சேர்ந்த 70ஆயிரத்து 238 பேரும் மன்னாரில் 952 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 244 பேரும் முல்லைத்தீவில் 167 குடும்பங்களைச் சேர்ந்த 563 பேரும் வவுனியாவில் 450 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 120 பேரும் பதுளையில் 329 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 324 பேரும் மொனராகலையில் 140 குடும்பங்களைச் சேர்ந்த 485 பேரும் ஹம்பாந்தோட்டையில் ஆயிரத்து 513 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 512 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# செஞ்சோலை வளாகத்திலும் உறவுகளுக்கு நேற்று அஞ்சலி



முல்லைத்தீவு, ஓக. 15

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ஆம் திகதி முல்லைத்தீவு வள்ளிபுனம் இடைக்கட்டு பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப்படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள் 53 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு செஞ்சோலை வளாகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

சமூக செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் குறித்த பகுதியில் உயிரிழந்த உறவுகளுக்கு சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறித்த பகுதியில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்டவர்களும் அஞ்சலி செலுத்தினர்.

(அ)

# காலை உணவை உட்கொள்ளாமல் ஜப்பான் தூதுவரை வரவேற்க வந்த மாணவி மயக்கம்!



கிளிநொச்சி, ஓக. 15

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இலக்கம் 02 அ.த.க பாடசாலைக்கு ஜப்பானிய மக்களின் நன்கொடையாக வழங்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத்தை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக கையளிக்கும் நிகழ்வுக்கு வருகை தந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுசி கிடாக்கி அவர்களை வரவேற்கும் நிகழ்விற்காக காலை உணவு உட்கொள்ளாது வருகை தந்து நீண்ட நேரம் காத்திருந்த பாண்ட் அணி மாணவி தூதுவருக்கு முன்னால் மயங்கி வீழ்ந்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடும் வெயில் மற்றும் காலை உணவு உட்கொள்ளாத நிலையில் பாண்ட் இசையுடன் ஜப்பானிய தூதுவரை அழைத்துவருகின்றபோதே மாணவி மயங்கி வீழ்ந்துள்ளார்.

மயங்கி வீழ்ந்த மாணவியை உடனடியாக ஆசிரியர்கள் குறித்த இடத்திலிருந்து தூக்கிச் சென்றுவிட்டனர்.

(அ)

# மன்னாரில் அமைக்கப்பட்ட காற்றாலை மின் நிலையத்தை எதிர்த்து போராட்டம்



மன்னார், ஓக. 15

உள்ளூர் நிபுணர்களின் உதவியுடன் குறித்த காலத்திற்கு முன்னதாகவே பணிகளை நிறைவு செய்ததாக அரசாங்கம் பெருமை பேசிகொள்ளும், மன்னார் புதிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தால் பாதிக்கப்பட்ட தமது வாழ்வாதாரத்தை மீட்டுத் தருமாறு கோரி, அப்பிரதேச மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

விண்ட்போஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான ஹிருரெஸ் பவர் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 15 மெகாவொட் மின்னுற்பத்தி நிலையம், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் திறந்து வைக்கப்பட்ட நிலையில், அமைக்கப்பட்டுள்ள காற்றாலை கோபுரங்கள் தமது வாழ்வை சீர்குலைத்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின் உற்பத்தி நிலையத்திற்காக 6 காற்றாலை கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றுள் 2 கோபுரங்கள் மக்கள் வசிக்கும் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நறுவிலிக்குளம் கிராமத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளதால் தமது வாழ்வாதாரம் மாத்திரமன்றி அன்றாட வாழ்விற்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

காற்றாலை கோபுரங்கள் எழுப்பும் அதிக சத்தம் அப்பகுதியில் உள்ள மீன்பிடி தொழிலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை போராட்டத்தில் கலந்துகொண்ட கிராமவாசி ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

“காற்றாலை இயங்க ஆரம்பித்த நாள் முதல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் வருமானத்தை இழந்தனர். ஒரு நாளைக்கு 1,000 ரூபாய் சம்பாதித்தவர்கள் இப்போது 200 அல்லது 300 ரூபாயையே சம்பாதிக்கிறார்கள். சில நாட்களில் அதுவும் இல்லை. ஏனென்றால் இரண்டு காற்றாலை கோபுரங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ளன. இரவில் மக்கள் தூங்க முடியாது. குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், பாடசாலை செல்லும் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.”

அப்பிரதேச மக்கள் படும் இன்னல்கள் தொடர்பில் ஜனாதிபதி முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை அனைவருக்கும் பல தடவைகள் தெரிவித்தும் எந்தவித சாதகமான பதில்களும் கிடைக்கவில்லை எனவும் தமது கிராமத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு காற்றாலை கோபுரங்களையாவது நிறுத்தி அல்லது அகற்றி மக்களின் அன்றாட வாழ்வை சுமூகமாக கொண்டுச் செல்ல வழிவகைச் செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காற்றாலை கோபுர பகுதியில் உள்ள சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட தாய் ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

“காற்றாலைகளின் சத்தத்தால், மக்கள் கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தலைவலியால் சிறுவர்களுக்கு இரவில் கல்வி கற்க முடியவில்லை. இரவில் சத்தம் அதிகம் என்பதால் கிராமத்தில் அனைவருக்கும் தலைவலி ஏற்பட்டுள்ளது”-என அவர் கூறினார். (அ)

# இரண்டு பிள்ளைகளும் பெற்றோரும் விசம் அருந்தி வைத்தியசாலையில்!

கொழும்பு, ஓக. 15

ரம்புக்கனை பத்தம்பிட்டிய பிரதேசத்தில் உள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் விஷம் அருந்தியதால் நேற்று காலை மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்புக்கன பத்தம்பிட்டிய கிராமத்தில் வசிக்கும் 28 வயதுடைய தந்தை, 27 வயதுடைய தாய் மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாவனல்லை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தாய் தந்தை இருவரும் வீட்டில் இருந்த தமது இரண்டு பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்து விஷம் அருந்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பின்னர் அவர்கள் வீட்டில் கிடப்பதைக் கண்ட அயலவர்கள் அவர்கள் நால்வரையும் முச்சக்கரவண்டியில் மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு குழந்தைகளுக்கும் பெற்றோரே விஷம் கொடுத்தமைக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# குடும்பஸ்தர் வெட்டிக்கொலை

கொழும்பு, ஓக. 15

ஒரு பிள்ளையின் தந்தை கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மாத்தறை - தொடங்கொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

37 வயதுடைய திமுத் சாமிக்க என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், சந்தேகநபரைக் கண்டுபிடிக்கும் நோக்கில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# 13ஐ வடக்கு மக்களும் விரும்பவில்லையாம்!

## கூறுகிறார் நாரங்கபானவே ஆனந்த தேரர்

**கொழும்பு, ஓக. 15**

**பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை வடக்கு மக்கள் விரும்பவில்லை என்பதை அரசியல் பொறுப்புள்ளவர்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் என அஸ்கிரி பீடத்தின் பிரதிப் பதிவாளர் நாரங்கபானவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**



தென்னிலங்கை மக்களின் பொருளாதார, கல்வி, சுகாதாரத் தேவைகள் வடபகுதி மக்களுக்கே தேவை என்பது நாட்டின் ஒட்டுமொத்தப் பிரச்சினை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் இந்திய அரசாங்கத்தினால் பலவந்தமாக எமது நாட்டுக்கு வழங்கப்பட்டதேயன்றி இந்நாட்டு மக்களின் தேவைக்காக ஸ்தாபிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்போதும்கூட வடக்கு-கிழக்கில் சிங்கள மக்களுக்கு நடக்கும் பல்வேறு அநீதிகள் பற்றி யாரும் பேசுவதில்லை. அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் புத்தசாசன அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட விகாரைகள் கட்டப்படுவதைக் கூட அப்பிரதேசத்தின் தமிழ் அரசியல் தலைவர்களின் செல்வாக்கின் பேரில் அதிகாரிகள் எவ்வாறு செயற்பட்டுள்ளனர் என்பதை காணலாம். இத்தகைய பின்னணியில் 13 + நடைமுறைப்படுத்தப்பட்டால், எவரும் சிரமமின்றி நிலைமையைப் புரிந்து கொள்ளலாம் என்றும் அவர் கூறினார். (அ)

# தேசபந்து தென்னக்கோனின் பேஸ்புக் 'ஹக்' செய்யப்பட்டது!

கொழும்பு, ஓக. 15

மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் ஹக் செய்யப்பட்டதை அடுத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தென்னக்கோன், "அங்கீகரிக்கப்படாத நபர் ஒருவர் எனது முகநூல் பக்கத்தை அணுகியுள்ளமை தெரிய வந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

பக்கத்தின் கட்டுப்பாட்டை மீட்டெடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (அ)

# நெற்பயிரை தீயிட்டு எரித்தால் நட்டஈடு வழங்கப்பட மாட்டாது!

கொழும்பு, ஓக. 15

வறட்சியினால் சேதமடைந்த நெற்பயிர்களை தீயிட்டு எரித்தால், பயிர் சேதங்களுக்கான நட்டஈடு வழங்கப்பட மாட்டாது என விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை, விவசாய அமைச்சுக்கு அறிவித்துள்ளது.

நெற்பயிர்களுக்கு தீ வைப்பது சட்டவிரோதமானது எனவும், அண்மைய நாட்களில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக அறிய கிடைத்ததாகவும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், வறட்சியால் நெற்பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான மதிப்பீடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# 20 வீதமான வாகனங்கள் மோசடி முறையில் பதிவு!

கொழும்பு, ஓக. 15



இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம், உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் இலங்கை தொடருந்து திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்களை டிஜிற்றல் மயமாக்குவதன் ஊடாக 50 சதவீத அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களை ஊழல் மற்றும் மோசடிகளில் இருந்து விடுவிப்பதற்கான ஒரே வழி டிஜிற்றல் மயமாக்கல் மாத்திரமே என அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு வடிவங்களில் எதிர்ப்புகள் இருந்தாலும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தை டிஜிற்றல் மயமாக்க தொடர்ந்தும் முயற்சிக்கப்படுகிறது.

வீதிகளில் பயணிக்கும் வாகனங்களில், சுமார் 20 சதவீதமானவை மோசடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரச வருமானம் ஈட்டுவதில் குறித்த 5 அரச நிறுவனங்களும் பிரதான பங்கு வகிப்பதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# யாழ்ப்பாண பல்கலையிலும் செஞ்சோலை நினைவேந்தல்





யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று திங்கட்கிழமை செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் உயிர்நீத்த பாடசாலை மாணவர்களின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைசுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக செஞ்சோலை படுகொலையின் நினைவுரை யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வஸ்டர் ஜெல்சினால் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு, வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் 2006 .08.14 அன்று இலங்கை வான்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி சுமார் 61 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

# மரக்கறி வகைகள் விலை அதிகரிப்பு

வடமராட்சி, ஓக. 15

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பொதுச் சந்தைகளில் நேற்று திங்கள் திடீரென மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன. இன்று செவ்வாய்க்கிழமை தந்தையை இழந்தவர்கள் அவர்கள் நினைவாக விரதமிருந்து பிதிர் கடன் செய்வது வழமை. இதனால் நேற்று மரக்கறிகள் விலை அதிகரித்துள்ளது.

அந்த வகையில் ஒரு கிலோ காத்தோட்டியம் காய் 3200 ரூபா வரையும், பாகற்காய் 800 ரூபா வரையும், பயிற்றங்காய் 400 ரூபாவும், மிளகாய் 550 ரூபாவரையும், கத்தரிக்காய் 350 ரூபா வரையும் விற்பனையாகின. (அ-02)

# சுவர்களுக்கு இடையில் சிக்கிய 7 வயது மாணவி

## பாதுகாப்பாக மீட்ட தீயணைப்பு பிரிவினர்

கொழும்பு, ஓக. 15

களுத்துறையில் பாடசாலை ஒன்றில் இரண்டு சுவர்களுக்கு இடையில் சுமார் 30 நிமிடங்கள் சிக்கியிருந்த 7 வயதான மாணவியை களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளதாக களுத்துறை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

களுத்துறை கட்டுக்குருந்த றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இரண்டாம் ஆண்டில் பயிலும் மாணவியே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

பாடசாலையின் கழிவறை மற்றும் மதிலுக்கு இடையில் மாணவி சிக்கியுள்ளார்.

களுத்துறை மாநகர தீயணைப்பு பிரிவின் அவசர அம்புலன்ஸ் வண்டி உடனடியாக பாடசாலைக்குச் சென்று, ஸ்பேடர் என்ற நவீன கருவியின் உதவியுடன் இரண்டு சுவர்களைத் தள்ளி மாணவியை காப்பாற்றியதாக களுத்துறை மாநகர சபை தீயணைப்பு பிரிவின் தலைமை அதிகாரி ஓ.வி.ஐ. பி.லக்ஷான் தெரிவித்துள்ளார். (அ)

# கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு வரலாம்

கொழும்பு, ஓக. 15

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா கையிருப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

பிரீமா மற்றும் செரண்டிப் தவிர அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு கடந்த ஜூலை 16 ஆம் திகதி முதல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களம் தடை விதித்துள்ளது.

தடை விதிக்கப்பட்ட நேரத்தில், புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்களிடம் கோதுமை மா பாரிய அளவில் கையிருப்பில் இருந்தது.

அது தற்போது தீர்ந்து வருவதாகவும் இந்த நிலை காரணமாக சந்தையில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பிரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் கடந்த மாதம் 18ஆம் திகதி ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 10 ரூபாவினால் குறைத்திருந்த நிலையில், தற்போது சந்தையில் ஒரு கிலோ கோதுமை மா 220 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (அ)

# ஈழத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடக்கின்றனவா?

## லெப்ரினன்ட் ஜெனரல் ஜகத் டயஸ் கேள்வி

கொழும்பு, ஓக. 15

**அரசமைப்பு ஊடாக ஈழத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவா என முன்னாள் இராணுவ பிரதானி லெப் ஜெனரல் ஜகத் டயஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.**



13ஆவது திருத்தத்திற்கு எதிரான நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தவேளை இதனைதெரிவித்துள்ள அவர், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது வடக்கு-கிழக்கில் தனிநாடு உருவாவதற்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்திருக்கின்றீர்களா எனவும் குறிப்பிட்டார்.

விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நாடு பிளவுபடுவதற்கு வழிவகுக்கும் என்பதால் அதனை அவசரமாக எதிர்க்கவேண்டிய தேவை உள்ளதாக தான் உணர்ந்தார் என ஜகத் டயஸ் குறிப்பிடடார்.

தங்கள் உயிர்களை பணயம் வைத்து விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக 2009 இல் போரிட்டவர்கள் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை ஊக்குவிக்கும் தற்போதைய நிகழ்ச்சி நிரலை எதிர்க்கின்றனர் என ஜகத் டயஸ் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பை புறக்கணித்துவிட்டு சில இராணுவத் தளங்களை மூடுவது, தொல்பொருளுடன் தொடர்புள்ள இடங்களை கைவிடுவது, பொதுசொத்துக்களை தனியார் மயப்படுத்துவது, இராணுவத்தை பலவீனப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் நாட்டைப் பிளவுபடுத்தும் சூழலை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டவையா எனவும் முன்னாள் இராணுவ அதிகாரி கேள்வி எழுப்பினார்.

முன்னர் ஒருபோதும் இவ்வாறான பொதுநிகழ்வில் கலந்துகொள்ளாத ஜகத் டயஸ் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் தனக்குள்ள கடப்பாட்டினை இந்தியா நிறைவேற்ற தவறிவிட்டதால் இலங்கை மீது திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை நியாயப்படுத்த முடியாது எனவும் குறிப்பிட்டார்.

ஆகவே இலங்கை அந்த உடன்படிக்கையை மதிக்க வேண்டியதில்லை என அவர் கூறினார்.

1987 இல் எந்த சூழ்நிலையில் இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது என்பதை நினைவு கூர்ந்த அவர், யாழ். குடாநாட்டில் வடமராச்சி பிரதேசத்தில் படையினர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். விடுதலைப் புலிகளின் தலைவரை பிடிக்கும் நிலையிலிருந்தனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இலங்கை உடன்படிக்கையின் படி விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை களைய முடியவில்லை இதன் காரணமாக இலங்கை இந்த உடன்படிக்கையை மதிக்கவேண்டியதில்லை எனவும் தெரிவித்துள்ள அவர், உருவாகிவரும் அச்சுறுத்தல் குறித்துநாடு விழிப்படைய வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# இலக்கத்தின் மூலம் நபர்களை அடையாளம் காண நடவடிக்கை

கொழும்பு, ஓக. 15

இலத்திரனியல் அடையாள அட்டையின் ஊடாக எதிர்காலத்தில் ஒவ்வொரு பிரஜைக்கும் குறிப்பிட்ட இலக்கம் அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறினார்.

இதன்படி, ஒவ்வொரு நபரையும் உரிய இலக்கத்தின் மூலம் அடையாளம் காணும் முறைமையொன்றை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் வீதியோர கடைகளில் ஒரு கோப்பை தேநீர் வாங்குகின்றபோதும் இந்தியர்கள் ஆதார் எனும் அட்டையினை பயன்படுத்தி 5 அல்லது 10 ரூபாவினை செலுத்துகின்றனர் எனவும், இந்த முறைமை எதிர்காலத்தில் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இதற்கான அடித்தளத்தினை அமைப்பதற்கு சுமார் ஒரு வருடங்கள் தேவைப்படும் எனவும், இதன் மூலம் அனைவருக்கும் அடையாள இலக்கம் கிடைக்கப்பெறும் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு வழங்கப்படும் இலக்கம் தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்ல எனவும், குறித்த எண் ஊடாகவே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

# ஆண்டு இறுதிக்குள் ஒற்றை இலக்கத்திற்குள் வங்கி வட்டி?

கொழும்பு, ஓக. 15

இந்த ஆண்டின் இறுதிக்குள் வங்கி வட்டிவீதங்களை ஒற்றை இலக்கத்திற்கு கொண்டு வர முடியும் என ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சிறு, நடுத்தர உரிமையாளர்கள் மீண்டும் வலுப்பெறுவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சியின் சிறிகொத்தா கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற அதிகார சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் கூறினார்.

பொருளாதார நெருக்கடியின்போது, வங்கி வட்டி விகிதங்கள் 34 சதவீதமாக இருந்ததாகவும், ஆனால் இன்று அவை 16 முதல் 17 சதவீதமாக உள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளதாக ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரட்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# தமிழக வாக்குகளை சூறையாடவே கச்சதீவு விவகாரத்தை கையில் எடுத்துள்ளார் மோடி!

## இலங்கை இராஜதந்திரி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 15

கச்சதீவு விவகாரத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

“இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாக்கு நீரிணையில் அமைந்துள்ள கச்சதீவானது 1.6 கி.மீ நீளத்தையும் 300 சதுர மீற்றர் அகலத்தையும் கொண்டதாகும். அத்துடன், 285 ஏக்கர் பரப்பளவை கொண்ட கச்சதீவில் மக்கள் எவரும் வசிக்கவில்லை.

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தென்னிந்திய மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகவே மோடி இவ்வாறு பேசியுள்ளார்.

கச்சதீவில் நடைபெறும் வருடாந்த புனித அந்தோனியார் திருவிழாவில் விசா இல்லாமல் இந்தியர்கள் கலந்துகொள்ளலாம். இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல்வளத்தை சூறையாடுவதை இங்குள்ள தமிழர்கள் எதிர்க்கிறார்கள்“ என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிரான எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, கச்சதீவு பற்றியும் கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்ட விவகாரம் பற்றியும் கடும் தொனியில் பேசியிருந்தார். இந்த விவகாரத்தில் காங்கிரஸ் மற்றும் இந்திரா காந்தி பற்றியும் விமர்சித்திருந்தார்.

ராகுல் காந்தியை கடுமையாக தாக்கி பேசிய பிரதமர் மோடி, 1974 இல் கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது இந்திரா காந்தியின் அரசாங்கம் தான் என்றும் கூறினார்.

“கச்சதீவு தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள ஒரு தீவு. யாரோ அதை வேறு நாட்டுக்குக் கொடுத்தார்கள். இந்திரா காந்தியின் தலைமையில்தான் அது நடந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

கச்சதீவை மீட்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பலமுறை எனக்கு கடிதங்களை அனுப்பியுள்ளதுடன், கச்சதீவை இலங்கைக்கு வழங்கியதன் மூலம் தமிழக மீனவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக முதல்வர் ஸ்டாலின் மோடிக்கு கடந்த வாரம் பிரதமர் மோடிக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரசவ அறையில் கவனயீனம்! தவறி விழுந்த சிசு உயிரிழப்பு!!

## அநுராதபுரம் வைத்தியசாலையில் துயரம்

கொழும்பு, ஓக. 15

மருத்துவ ஊழியர்களின் தவறினாலும் கவனக் குறைவினாலும் பிரசவ நேரத்தில் குறித்த அறையின் தரையில் விழுந்த சிசு ஒன்று, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கல்லஞ்சிய என்ற கிராமத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் தனது குழந்தைப் பிரசவத்திற்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோதே இந்த துயர அனுபவத்தை சந்தித்துள்ளார்.

41 வயதான அவரது கணவர், குமாரசிங்க திஸாநாயக்க இது தொடர்பில் தெரிவிக்கையில்-

எனது மனைவி கல்லஞ்சிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவள் அங்கு சிக்கல்களுக்கு ஆளானார். அம்புலன்சில் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

பின்னர், பிரசவத்திற்காக பிரசவ அறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பிரசவ நேரத்தில், மருத்துவ ஊழியர்களால் குழந்தையைப் பிடிக்க முடியாமல் என் குழந்தை தரையில் விழுந்துவிட்டது“ என கண்ணீருடன் தெரிவித்தார்.

தற்போது குழந்தையின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குழந்தை சரியாக முதிர்ச்சியடையவில்லை என்று மருத்துவர்கள் கூறினாலும், அவர்கள் குழந்தை கீழே விழுந்ததைபற்றி பேசவில்லை என்று அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலை பணிப்பாளர் துலான் சமரவீர இது தொடர்பாக தெரிவித்துள்ளதாது,

பிரசவ அறையில் வைக்கப்பட்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு சாதாரண பிரசவம் சுமார் 20 நிமிடங்களுக்குள் இடம்பெறும்.

முதலில் குழந்தையின் தலை வெளியில் வரும். அதன் பிறகு, தோள்பட்டை, கை பகுதி மற்றும் கால்கள் போன்ற பாகங்கள் வெளியே எடுக்கப்படுகின்றன. இது சிறிது நேரம் எடுக்கும் மிகவும் கடினமான செயல். ஆனால், சில சமயங்களில் குழந்தை ஒரே நேரத்தில் வெளியே வரும்.

சில சமயம் எப்போது வரும் என்று சொல்ல முடியாது. நம்பிக்கை இல்லாதபோது திடீரென வரும்போதும், குழந்தையை வெளியில் பிடிக்க முயலும் போது சில சமயம் சிரமங்கள் ஏற்படலாம்.

அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பங்களில் ஒன்று தான் தற்போது இடம்பெற்றுள்ளது. ஏனெனில், இந்த தாய் பிரசவத்திற்காக வேறு வைத்தியசாலைக்குச் சென்று அங்கிருந்து இங்கு மாற்றப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த நாளில் அனுமதிக்கப்படவிருந்த பிரிவின் பிரசவ அறைக்கு அழைத்துச் செல்ல முடியாததால், அருகில் உள்ள பிரசவ அறைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

குறித்த அறையில் சிறிது நேரம் கழித்து தொடங்கிய பிரசவத்தில் 31 வாரங்கள் ஆன குறித்த குழந்தை சரியாக வளர்ச்சியடையவில்லை எனவும் கண்டறியப்பட்டது.

கடும் அழுத்தத்தால் அதிக விசையுடன் குழந்தை பிறந்துள்ளது. குழந்தையின் தொப்புள் கொடி உடைந்ததால், அக்குழந்தையை பிடிக்க அந்த நேரத்தில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், என்ன நடந்தது என்று என்னால் சரியாக சொல்ல முடியாது. இருப்பினும், இதை நான் எதிர்பாராத, துரதிர்ஷ்டவசமான சம்பவமாக பார்க்கிறேன்.

ஆனால், அலட்சியமாக இதைப் பற்றி சொல்ல முடியாது. ஏனென்றால், இந்த நேரத்தில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவரும் இந்த பிரசவத்தை கவனித்துள்ளார்கள்- என்றார். (அ)



# பண வாட்டம்:

# சீனாவில் பொருட்களின் விலை மளமளவென சரிவது ஏன்?

உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட நாடான சீனா, தற்போது தீவிர சிக்கலில் உள்ளது. பொதுவாக பணவீக்கம், அதாவது பொருட்களின் விலையேற்றத்தால் நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்படும். ஆனால் சீனாவை தற்போது வாட்டுவது, பணவாட்டம், அதாவது பொருட்களின் விலைகள் மள மளவென சரிந்து வருகின்றன.

கடந்த 18 மாதங்களாக பணவீக்கத்தை கட்டுப்படுத்த அமெரிக்கா திணறிக்கொண்டிருக்கும் நிலையில், சீனாவில் தலை கீழ் நிலைமை நிலவுகிறது. மக்களும் தொழில் நடத்துபவர்களும் பணத்தை செலவு செய்வதில்லை. இது, ஊநகடயவழைெ எனப்படும் பண வாட்டத்துக்கு இட்டுச் சென்றுள்ளது.

கடந்த பல மாதங்களில் சீனாவில் வாடிக்கையாளர் விலைகள் மிக அரிதாகவே உயர்ந்தன. இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக கடந்த ஜூலை மாதத்தில் விலைகள் சரிய தொடங்கின. தொழிற்சாலைகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் கிடைக்கும் மொத்த விலை முந்தைய ஆண்டு இருந்ததை விட குறைய தொடங்கியது. வீட்டுமனை துறை ஆட்டம் காண ஆரம்பித்தது.






**பணவாட்டம் என்றால் என்ன?**

பண வீக்கத்துக்கு எதிரான நிலையே பணவாட்டம். பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை நாடு முழுவதும் குறைந்து, வாங்கும் சக்தியை தற்காலிகமாக அதிகரிக்கும். இதை, நாட்டின் பொருளாதாரத்துக்கான எச்சரிக்கை மணியாகவே கருத வேண்டும். இவை தொடர்ந்து நீடித்தால், பொருளாதார மந்த நிலையை அடையும்.

ஜப்பானில் பல ஆண்டுகள் இருந்தது போல குடும் பங்களில் தீவிர பாதிப்பை ஏற்படுத்தி, பெற்ற கடன்களை திரும்ப செலுத்த மிகவும் சிரமத்தை ஏற்படுத்தும். இது போன்ற பணவாட்டம், குறிப்பாக சீனா போன்று கட னில் இருக்கும் நாடுகளுக்கு பெரும் ஆபத்தானதாகவே கருதப்படுகிறது.





**பணவாட்டம் ஒரு பிரச்னையா?**

மேலோட்டமாக பார்க்கும் போது, விலைகள் குறைவது நல்ல செய்தி போல் தெரிந்தாலும், அது உண்மை அல்ல. விலைகள் குறைவதால், பொருளாதாரத்தில் தேவை குறையும். தொடர்ந்து தேவை குறைந்தால் உற்பத்தி குறையும். உற்பத்தி குறையும் போது தொழில் வருவாய்கள் குறையும், இதனால் வேலை இழப்புகள் அதிகமாகும், பொருளாதார சிக்கல் ஏற்படும்.

**கொரோனாவின் தாக்கம்**

பல வளர்ந்த நாடுகளில், கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு, மக்கள் அதிக அளவில் பணத்தை செலவு செய்ய தொடங்கினர். பணத்தை சேமித்து வைத்திருந்தவர்களுக்கு, அதை முதலீடு செய்யவும், செலவு செய்யவும் முடிந்தது. அதிகரிக்கும் மக்களின் தேவையை பூர்த்தி செய்ய தொழில்கள் போராடிக் கொண்டிருந்தன.

பொருட்களின் தேவை அதிகமானதாலும், ரஷ்ய-உக்ரைன் போருக்கு பிறகு எரிசக்தி விலை உயர்ந்ததாலும், விலை ஏற்றத்துக்கு அது வழி வகுத்தது. ஆனால் சீனாவில், பெருந்தொற்றுக்கு பிறகு, விலைகள் உயரவில்லை. மாறாக குறைய தொடங்கின.

கொரோனா பெருந்தொற்று பரவாமல் இருக்க, கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருந்த நாடு சீனா. இதனால் சீனாவின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 3 வீதமாக மட்டுமே இருந்தது. 1976க்கு பிறகு, மிக குறைந்த வளர்ச்சி சதவீதம் இதுவாகும். இந்த ஆண்டு மே, ஜூன், ஜூலை என தொடர்ந்து மூன்று மாதங்களாக சீனாவின் ஏற்றுமதிகள் குறைந்தன.

கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு ஏற்றுமதிகள் கடுமையாக குறைவது இது தான் முதல் முறையாகும். கடந்த ஆண்டை ஒப்பிடும் போது அமெரிக்காவுக்கான சீனாவின் ஏற்றுமதி 23.1 வீதம் குறைந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி 20.6 வீதம் குறைந்துள்ளது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு கிட்டத்தட்ட எட்டு மாதங்கள் ஆகியுள்ளன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதாரம் சீராகி வருவதாக தெரிந்தது. ஆனால் தற்போது மீண்டும் மந்த நிலையை எட்டியுள்ளது.

**என்னவெல்லாம் விலை குறைந்துள்ளது?**

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில், வாடிக்கையாளர் விலை குறியீடு 0.3 வீதம் குறைந்துள்ளது. உணவு, போக்குவரத்து, வீட்டு உபயோகப் பொருட்களின் விலைகள் ஜூலை மாதத்தில் குறைந்தன. சீனாவின் முக்கிய உணவான பன்றிக் கறியின் விலை 26 வீதம், காய்கறிகளின் விலை 1.5 வீதம் குறைந்தன. கார்களின் விலை கடுமையாக குறைந்துள்ளது.

**வீட்டு மனை சந்தை சரிவு**

சீனாவில் சுமார் ஐந்தில் மூன்று குடும்பங்களின் சொத்துகள் வீடுகளிலும் வீட்டு மனைகளிலும் உள்ளன. தற்போது வீட்டு மனை சந்தையின் பெரும் வீழ்ச்சி சீனாவை கடுமையாக பாதித்து வருகிறது. சீனாவில் 100 நகரங்களில் உள்ள வீடுகளின் விலைகள், 2021ம் ஆண்டு இருந்த விலைகளை விட 14 வீதம் குறைந்துள்ளது. வீட்டு வாடகைகள் 5 வீதம் குறைந்துள்ளது. வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், கடன் பெறுவதற்கு நிறுவனங்களும் மக்களும் முன் வரவில்லை.

**பண வாட்டத்தால் சீனாவுக்கு என்ன பாதிப்பு?**

சீனாவின் பொருளாதாரத்தில் பண வாட்டம் பல வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

பெருந்தொற்றுக்கு பிறகு, எதிர்பார்த்ததை விட குறைவான வேகத்திலேயே சீனாவின் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது. சீனாவின் ஏற்றுமதி 14.5 வீதம் சரிந்துள்ளது, அதே போன்று இறக்குமதி 12.4 வீதம் குறைந்ததுள்ளது என சீனா அரசின் தரவுகள் தெரிவிக்கின்றன.

சீனாவின் வீட்டுமனை சந்தை திணறி வருகிறது. சீனாவின் மிகப்பெரிய வீட்டு மனை நிறுவனமான எவர்கி ராண்டே மோசமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

எண்ணெய் முதல் செம்பு வரை பொருட்களின் விலை சரிந்தன. சீனாவில் முதலீடு செய்ய வேண்டும் என காத்திருந்த ஆடம்பர பொருட்களின் உற்பத்தி நிறுவனமான எல் வி எம் எச்-ன் பங்குகள் குறைந்தன.

ஏற்கெனவே உற்பத்தித் துறையில் சீனாவுக்கு மாற்றை அமெரிக்காவும் ஜெர்மனியும் தேடி வரும் நிலையில், பண வாட்டம் சீனாவுக்கு மேலும் சிக்கலையே உருவாக்கும்.

சீனாவில் 2009 மற்றும் 2012 இதே போன்ற பண வாட்டம் ஏற்பட்ட போது அது கடுமையான பாதிப்பை ஏற்படுத்தாமல் சீனா தவிர்த்து விட்டது. தற்போது சீனா வுக்கு இருக்கும் மிகப்பெரிய சவால், அதன் முதலீட்டா ளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மத்தியில் நம்பிக்கை உருவாக்கி, பொருளாதாரத்தில் பண சுழற்சியை ஏற்படுத் துவதே ஆகும்.

**இந்தியாவின் மீது என்ன தாக்கம்?**

சீனாவின் பொருளாதார மந்த நிலையை எட்டினால், உலக உற்பத்தி சந்தையில் ஏற்படும் வெற்றிடத்தை இந்தியா நிரப்ப முடியும். வளர்ந்த நாடுகளும் கூட சீனாவின் ஆதிக்கத்தை உற்பத்தித் துறையில் தவிர்க்க வேண்டும் என்று எண்ணம் நிலையில் இது இந்தியாவுக்கு சாதகமாக அமையலாம்.

அதே நேரம், இந்தியாவிலிருந்து இரும்பு தாது பெரிய அளவில் இறக்குமதி செய்யும் நாடு சீனா. சீனாவின் தேவையில் 70 வீதம் இரும்பு தாதுவை இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்கிறது. சீனாவின் இறக்குமதிகள் குறைந்து வரும் நிலையில், இது இந்திய பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

**உலக நாடுகள் மீது என்ன தாக்கம்?**

உற்பத்தித் துறையில் உலகில் கோலாச்சி வரும் நாடு சீனா. சீனாவில் பண வாட்டம் நீடித்தால், பிரிட்டன் உட்பட உலகின் பிற பகுதிகளில் நிலவும் விலை ஏற்றம் குறையும். ஆனால் சீனாவின் விலை குறைவான பொருட்கள் உலக சந்தையில் பெருகினால் பிற நாடுகளின் உற்பத்தியாளர்கள் மீது அது தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் தொழில் முதலீடுகளும் வேலை வாய்ப்புகளும் பாதிக்கும். நலிந்த சீன பொருளாதாரம் உலக பொருளாதாரத்தில் தேவையை குறைக்கும்.

கிறிஸ் பரனியுக்

# சந்திரயான் 3 VS லூனா 25: நிலவின் தென் துருவத்தை முதலில் தொடப்போவது இந்தியாவா? ரஷ்யாவா?

தற்போது ஒரு குட்டி விண்வெளி பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது. ஆம். இதற்கு முன்பு எந்த விண்கலமும் வெற்றிகரமாக சென்றடையாத, நிலவின் தென்துருவத்தை நோக்கி இரண்டு விண்கலன்கள் சென்று கொண்டிருக்கின்றன. ஒன்று- இந்தியாவின் விண்கலம், மற்றொன்று ரஷ்யாவின் விண்கலம்.

நிலாவில் உள்ள பயனுள்ள தாதுக்கள் மற்றும் பனியினை தேடும் போட்டியில் தான் இந்தியா மற்றும் ரஷ்ய விண்கலங்கள் ஈடுபட்டுள்ளன.

விண்கலங்கள் புறப்பட்ட நேரத்தை கருத்தில் கொண்டால், இரண்டு விண்கலங்களும் ஒரே நேரத்தில் தான் அவர்களின் இலக்குகளான நிலவை அடைய வேண்டும். இதனை யாரும் திட்டமிடவில்லை. விண்வெளி ஆராய்ச்சியில் இது ஒரு எதிர்பாராத திருப்பாக அமைந்துள்ளது.

**யார் முதலில் செல்வார்கள் ?**

பல தசாப்தங்களாக, விண்வெளி ஆராய்ச்சி மற்றும் அங்கு நடக்கும் விஷயங்களைப் பற்றிய நம் வாசிப்பு, 1960 களில் நடந்த உண்மையான விண்வெளி பந்தயத்தில் இருந்து தொடங்குகிறது. அந்த பந்தயத்தில், அமெரிக்காவும், சோவியத் யூனியனும் சந்திரனில் முதலில் யார் ஒரு மனிதனை அனுப்புகிறார்கள் என போட்டியிட்டன.

பூமியின் சுற்றுவட்டப்பாதையில் செயற்கைக்கோளை செலுத்தி, விண்வெளியில் மனிதனை அனுப்பி, ஆளில்லா விண்கலத்தை நிலவில் தரையிறக்கிய முதல் நாடு சோவியத் யூனியன் என்றாலும், விண்வெளி வீரர்களை அப்பல்லோ 11 விண்கலம் மூலம் சந்திரனுக்கு ஏற்றிச் சென்ற முதல் நாடு என்ற பெருமையை அமெரிக்கா கொண்டுள்ளது.

இந்த சாகசம் உலகெங்கும் உள்ள தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. அதற்கு பிறகு, அடுத்த அடுத்த ஆண்டுகளில் மேலும் சில குழுக்களாக அப்பல்லோ விண்கலத்தில் அமெரிக்கா தனது பயணத்தை தொடர்ந்தது. அது, 1972 வரை நடந்தது. சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக, சந்திரனில் மனிதர்களை தரையிறக்கிய ஒரே நாடாக அமெரிக்கா உள்ளது.

சந்திரனின் மேற்பரப்பை ஆராய்வதற்கான இந்திய லேண்டர், சந்திரயான் 3, ஜூலை 14 ஆம் தேதி பூமியில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. பூமியை ஒரு சில முறை சுற்றி வந்த பிறகு, தரையிறங்குவதற்கான தயாரிப்பில் சந்திரனைச் சுற்றி பல வாரங்கள் செலவழிக்கும். வரும் ஆகஸ்ட் 23 ஆம் தேதி அன்று, சந்திர மேற்பரப்பைத் தொட உள்ளது சந்திராயன்-3.

இதற்கிடையில், ரஷ்ய லேண்டரான, லூனா -25,



கடந்த ஆகஸ்ட் 11 ஆம் தேதி மாஸ்கோ நேரப்படி அதிகாலை 2 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டது. இது சந்திரனுக்கு மிகவும் விரைவான நேரடியான பாதையில் செல்வதால், 10 நாட்களுக்குள் மேற்பரப்பை அடைய முடியும்.

**தென் துருவத்தை குறிவைக்கும் இரண்டு நாடுகள்**

நிலவின் தென் துருவத்தில் தரையிறங்குவதில் முதல் இடத்தை பிடிக்க வேண்டும் என்ற தங்களின் விருப்பத்தை ரஷ்ய விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் அதிகாரிகள் மறைக்கவில்லை.

ஆனால், லூனா -25-யின் பயணம் அதை விட சற்று அதிக நேரம் ஆகலாம், அதாவது சந்திரயான் -3 முதலில் நிலவை சென்றடையும். இறுதியில், மெதுவாகவும்,



நிதானமாகவும் சென்ற இந்திய விண்கலம்தான் இந்த பந்தயத்தில் வெல்லும்.

இரு நாடுகளின் இந்த முயற்சி, விண்வெளி ஆராய்ச்சி தளத்தில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தை பிரதிபலிக்கின்றன. சமீபத்தில் நமக்கு அருகில் உள்ள விண்வெளியில் கணிசமான பனிப் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால், விஞ்ஞானிகள் உற்சாகத்தில் உள்ளனர்.

ஏனெனில் எதிர்காலத்தில் நிலவின் தளத்தில் ராக்கெட் எரிபொருளை உருவாக்க தண்ணீரில் உள்ள ஹைட்ரஜனைப் பிரித்தெடுக்க முடியும். கூடுதலாக, உரிய பதப்படுத்துதலுக்குப் பிறகு அந்த தண்ணீரைக் குடிக்கலாம்..

லூனா-25 மற்றும் சந்திரயான்-3 இடையேயான போட்டி சந்திரன் தொடர்பான ஆய்வுகளின் ஒரு புதிய சகாப்தத்தை உள்ளடக்கியது, இதில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகள் மற்றும் சில தனியார் நிறுவனங்கள் சந்திரனை குறிவைத்துள்ளன.

பலருக்கு இது நட்புரீதியான போட்டி. ஆனால், இன்னும் மனித ஆய்வின் புதிய அத்தியாயம் ஆபத்தில் உள்ளது. தனி நபர் தரையிறங்குதல் மற்றும் ஒரு குழுவினர் தரையிறங்குவதற்கு எடுக்கப்படும் சிறிய முயற்சிகள், வரவிருக்கும் தசாப்தங்கள் மற்றும் நூற்றாண்டுகளில் சூரிய குடும்பத்தை வெல்வதில் மாபெரும் பாய்ச்சலுக்கு வழிவகுக்கும். யார் முதலில் அங்கு செல்கிறார் என்பது உண்மையிலேயே முக்கியமானது.

**பந்தயத்தில் வெற்றி பெற்ற ரஷ்யா**

லூனா-25 மற்றும் சந்திரயான்-3 பயணங்களின் நேரத்தைக் குறிப்பிடுகையில், 'இது எல்லாவற்றையும் விட தற்செயல் நிகழ்வாக மாறியது" என்கிறார் அமெரிக்க வான் மற்றும் விண்வெளிப் படையின் வான் பல்கலைக் கழகத்தின் உத்தி மற்றும் பாதுகாப்பு ஆய்வுகளின் பேராசிரியர் வெண்டி விட்மேன் கோப். மேலும் பேசிய அவர், இது ஒரு சுவாரஸ்யமான தற்செயல் நிகழ்வு என்றார்.



லூனா-25 யின் ஏவுதல் பல முறை தாமதமானது - இது முதலில் 2021 இல் திட்டமிடப்பட்டது. இந்தியாவின் விண்கலம் ஏற்கனவே சந்திரனை சுற்றி வருவதால், இந்தியா இப்போட்டியில் கொஞ்சம் முன் சென்றுவிட்டது.

ரஷ்யா நேரடியான வழியில் சென்றாலும் கூட, முதலில் நிலவிற்கு செல்வதற்கு சில அழுத்தங்களை உணரலாம். சந்திரயான் -3 லூனா -25 ஐ விட இரு மடங்கு கனமானது மற்றும் மிகவும் குறைவான சக்திவாய்ந்த ராக்கெட்டைப் பயன்படுத்தி ஏவப்பட்டது,

அதாவது சந்திரனை நோக்கிச் செல்வதற்கு முன்பு பூமியைச் சுற்றி பெரிய நீள்வட்ட சுற்றுப்பாதைகளை எடுத்து வேகத்தை உருவாக்க வேண்டும். எதிர்பாராத செயலிழப்புகள் முயற்சியை பின்னுக்குத் தள்ளலாம் அல்லது அந்த முயற்சியை முற்றிலுமாக முறியடிக்கலாம். விண்கலன்கள் அங்கு செல்லும் வரை, அது எப்படிப் போகிறது என்று இரு நாடுகளுக்குமே தெரியாது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பொருளாதாரத் தடைகளால் நாட்டின் விண்வெளித் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளதால், விண்வெளியில் அதன் தொடர்ச்சியான திறன்களை நிரூபிக்க ரஷ்யா முயற்சித்து வருகிறது.

“அவர்களின் விண்வெளித் தொழில் உண்மையில் பாதிக்கப்பட்டுள்ளது,” என்கிறார் விட்மேன் கோப். ஆனால், ரஷ்யாவைப் பொறுத்தவரை இது சந்திரனை நோக்கிய பந்தயம் அல்ல என்று இங்கிலாந்தில் உள்ள குயின் மார்கரெட் பல்கலைக்கழகத்தில் விண்வெளித் துறையைப் படிக்கும் ஸ்டெபானியா பலாடினி கூறுகிறார்.

ஏனெனில் முன்னாள் சோவியத் யூனியன் 50 ஆண்டுகளாக நிலவில் பல லேண்டர்களையும் ரோவர்களையும் வைப்பதில் வெற்றி பெற்றதுள்ளது. அந்த வகையில், ரஷ்யர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே பந்தயத்தில் வெற்றி பெற்றுவிட்டனர், அதற்கு மரியாதை செலுத்தும் வகையில், லூனா-25 என்ற பெயர், 1976 ஆம் ஆண்டு ரஷ்யா



வின் கடைசி நிலவுப் பயணமான லூனா 24-ஐ நினைவுபடுத்துகிறது.

**எல்லாம் திட்டமிட்டபடி நடக்குமா?**

சோவியத் லூனா 1 விண்வெளி ஆய்வில் முதல் விண்கலமாகக் கருதப்படுகிறது. இது சந்திரனின் மீது மோதும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று பார்வையாளர்கள் முடிவு செய்தனர், ஆனால் அதற்குப் பதிலாக அதன் மேற்பரப்பில் இருந்து 3,725 மைல்கள் (5,995 கிமீ) கடந்து சென்றது.

ஆனால், திட்டமிட்டபடி சந்திரயான்-3 விண்கலத்தைத் தொட்டால், சந்திரனில் 'மென்மையான தரையிறக்கத்தை" அடைவதில் 'உண்மையில் இந்தியா வெற்றி பெறுவது இதுவே முதல் முறையாகும்" என்கிறார் பலாடினி.

இரண்டு லேண்டர்கள் செப்டம்பர் 2019-ல் சந்திரனின் மேற்பரப்பில் மோதியதால், அந்த முயற்சி தோல்வியடைந்தது. இந்தியா இதற்கு முன் 2008- ஆண்டு சந்திரனின் தென் துருவத்திற்கு ஒரு விண்கலத்தை அனுப்பி அதன் மீது மோதச் செய்து ஆயவு நடத்தியது.

**தென்துருவத்தில் தரையிறங்குவது புதிதா?**

இதுவரை எந்த விண்கலமும் வெற்றிகரமாகச் சென்றதில்லை. அமெரிக்கா சார்பில் அனுப்பப்பட்டுள்ள அப்பல்லோ விண்கலன்கள் அனைத்தும் வடக்கே பூமியின் பாதைக்கு அருகில் உள்ள இடங்களுக்குச் சென்றன. அந்த தரையிறங்கும் தளங்கள் ஒப்பீட்டளவில் மென்மையான நிலப்பரப்பு மற்றும் நல்ல சூரிய ஒளியைக்கொண்டிருந்தன.

ஆனால், தென்துருவததில் நிலப்பரப்பு மிகவும் மேடு பள்ளங்கள் நிறைந்தது. மேலும், சூரியனில் இருந்து வரும் ஒளி கடுமையான கோணத்தில் வரும்.

இதுகுறித்து கொலராடோ போல்டர் பல்கலைக்கழகத்தின் வானியற்பியல் மற்றும் கிரக அறிவியல் துறை பேராசிரியரான ஜாக் பர்ன்ஸ் பேசுகையில், “அடிவானத்தில் சூரியனின் தாக்கம் மிகவும் குறைவாக இருக்கும். அதனால், நிழல்கள் மிக நீளமாக இருக்கும். சந்திரன் அதன் சாம்பல் மேற்பரப்பில் மிகவும் சீராக இருக்கும். எனவே, பள்ளங்கள் மற்றும் கற்பாறைகளை வேறுபடுத்துவது மிகவும் சவாலானதாக இருக்கும்" என்கிறார்.

அமெரிக்கா 2025 ஆம் ஆண்டில் தான் தனது ஆர்ட்டெமிஸ் ஐஐஐ குழுவை சந்திரனின் தென் துருவத்திற்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது. எனவே, அதற்கு முன்பா 'ரோபோ' லேண்டர்களின் அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்வது ஓரளவு பயனுள்ளதாக இருக்கும். ஆனால் குழுக்கள் கொண்ட விண்வெளிப் பயணம் எப்போதுமே கடினமாக இருக்கும் என்று விட்மேன் கோப் குறிப்பிடுகிறார்.

முன்னோக்கிச் செல்வதும், சந்திரனில் ஒரு நிலையான மற்றும் பயனுள்ள இருப்பை யாரால் அமைக்க முடிகிறது என்பது தான் உண்மையில் முக்கியமானது என்கிறார் அரிசோனா பல்கலைக்கழகத்தின் கிரக அறிவியல் பேராசிரியர் விஷ்ணு ரெட்டி. நாடுகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இடையிலா போட்டி உள்ளதை அவர் ஏற்கவில்லை.

“உண்மையில் அப்படி போட்டியாக சித்தரிப்பது ஒரு கவனச்சிதறல் என்று நான் நினைக்கிறேன். அரசியலின் அடிப்படையிலோ அல்லது ஒரு தேசத்தையோ அல்லது மற்றொன்றையோ வெல்ல முயற்சிப்பதன் மூலமாகவோ நீங்கள் நிலையான, நீண்டகால இருப்பைக் கொண்டிருக்க முடியாது,” என்கிறார் விஷ்ணு ரெட்டி.

மேலும் பேசிய அவர், “ஒவ்வொரு லேண்டர்களிலும் உள்ள அறிவியல் உபகரணங்கள் ஒப்பீட்டளவில் ஒத்ததாக இருக்கிறது. முக்கியமான சந்திரனின் பனி, தாதுக்கள் மற்றும் சந்திரனின் வரையறுக்கப்பட்ட வளிமண்டலம் போன்றவற்றைப் பற்றி மேலும் நன்கு புரிந்து கொள்ள இந்த லேண்டர்கள் விஞ்ஞானிகளுக்கு உதவும் என நம்புகிறோம். சந்திரனின் தென் துருவத்தின் தெளிவான படத்தைப் பெறுவதும் உதவியாக இருக்கும்,”என்றார்.

லூனா-25 மற்றும் சந்திரயான்-3 ஆகியவை, சர்வதேச கூட்டமைப்பிலிருந்தும் துவங்கியுள்ள ஆரம்பகால முயற்சிகளாகும்.

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் இரண்டாவது இயந்திரம் நாளை இயங்கும்

கொழும்பு, ஓக. 15

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் செயலிழந்துள்ள இரண்டாவது மின் உற்பத்தி இயந்திரத்தை நாளை மறுதினம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க முடியும் என மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி காலை, குறித்த மின் உற்பத்தி இயந்திரம் திடீரென செயலிழந்தமையினால் மொத்த மின்சார உற்பத்தியில் 270 மெகாவோட் மின்சாரம், தேசிய கட்டமைப்பிற்கு கிடைக்காமல்போனது.

மேலும், நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்று இயந்திரங்களில் ஒரு மின்பிறப்பாக்கி வருடாந்த பராமரிப்புக்காக கடந்த ஜூன் மாதம் இடைநிறுத்தப்பட்டது.

இதனால் தற்போது, ஒரேயொரு மின்பிறப்பாக்கி மட்டுமே இயங்கும் நிலையில் உள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், சமனலவாவி நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்தமையினால் அதன் மின் உற்பத்தி நிலையத்திலும் மின்சார உற்பத்திக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (அ)

# காரைதீவு- மண்டூர் முருகன் திருத்தல பாதயாத்திரை 26 ஆம் திகதி ஆரம்பம்



காரைதீவு, ஓக. 15

காரைதீவில் இருந்து மண்டூர் முருகன் ஆலயத்திற்கான திருத்தல பாதயாத்திரை இந்து மத எழுச்சியுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற உள்ளது.

காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை ஆகிய கிராம மக்களும் கலந்துகொள்வது வழக்கம்.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்க பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் "அரோகரா" கோசம் விண்ணைப்பிளக்க, நந்திக்கொடி தாங்கி ,.பஜனைப் பாடல்கள் சகிதம் பாதயாத்திரை சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் அடியார்கள் வரிசையில் செல்வது வழமை.

26 ஆம் திகதி அதிகாலை நான்கு மணியளவில் மாவடி சிறீ கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து புறப்படும் பாதயாத்திரை ஐந்து மணியளவில் கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயம், சிறீ முருகன் ஆலயத்தை அடைந்து நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, கிட்டங்கி, சவளக்கடை, நாவிதன்வெளி, வேப்பயடி, தம்பலவத்தை சென்று மண்டூர் ஆலயத்தை சென்றடையும்.

காரைதீவு இந்து சமய விருத்தி சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

(அ)



# இலங்கையில் சுரங்கத்துக்குள் உருவாக்கப்பட்டுள்ள உணவகம்

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் முதன்முறையாக, நிலத்துக்கு அடியில் 124 மீற்றர் தொலைவில் போகல காரீய சுரங்கத்தில் உணவகமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் ஒரே நேரத்தில் 15 பேர் அமர்ந்து உணவருந்தக்கூடிய வசதி உள்ளதாக போகல காரீய சுரங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அமில ஜயசிங்க தெரிவித்தார்.

மேலும், இந்த உணவகத்தின் ஊடாக காரீயம் வெட்டும் தொழிலாளர்களுக்கும், சுரங்கத்துக்கு வரும் மக்களுக்கும் உணவு வழங்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

1865 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட போகல காரீய சுரங்கமானது உயர்தர காரீய ஏற்றுமதி மூலம் உலகில் உயர்ந்த நற்பெயரை பெற்றுள்ளது.

ஜேர்மனி, ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு காரீயம் ஏற்றுமதி செய்து நாட்டுக்கு அதிக அளவில் அந்நிய செலாவணியை இந்த காரீய சுரங்கம் ஈட்டித்தருவதாக அதன் நிறைவேற்று அதிகாரி அமில ஜயசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# நாளை சித்திரவேலாயுதனின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்

காரைதீவு, ஓக. 15

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த ஆடி அமாவாசை மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இவ் உற்சவம் நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம் பெற இருக்கின்றது.

(அ)






# வீரமுனைப் படுகொலை தொடர்பான வழக்கை அரசு முன்னெடுக்கவேண்டும்!

## ஜனாதிபதிக்கு வீரமுனை மக்கள் பகிரங்க மடல்

**காரைதீவு, ஓக. 15**

**வீரமுனை படுகொலை தொடர்பான வழக்கினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று கோரும் “வீரமுனை மக்களின் நீதிக்கான கோரிக்கை” என்ற தலைப்பிலான பகிரங்க மடல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

இந்த பகிரங்க மடல் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற வீரமுனை படுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பகிரங்கமாக வாசித்து பொது மக்களால் அங்கீகரிக்கப்பட்டது.

அந்த பகிரங்க மடலில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளாவன..

01. இப்படுகொலை தொடர்பான வழக்கினை இலங்கை அரசாங்கமானது முன்னெடுக்க வேண்டும்
02. பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயமான நீதி கிடைக்கப் பெற வேண்டும்.
03. குற்றம் இழைத்தவர்களை நீதிக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்.
04. இம்மக்களின் தொடர் நினைவேந்தல்களை அனுஸ்டிப்பதற்கான பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும்.
05. மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும்.

அதேவேளை, ஜனாதிபதிக்கான அந்த மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வீரமுனை கிராமத்தில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்து தஞ்சமடைந்திருந்த வீரமுனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, வீரச்சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள்,பெண்கள் அடங்கலாக 55 பேர் 1990.08.12 அன்று இலங்கை இராணுவத்துடன் அந்தக் காலப்பகுதிகளில் சேர்ந்து இயங்கி வந்த ஊர்காவல் படையினரால் வெட்டியும், குறிப்பாக சிறுவர்கள் சுவற்றில் அடித்தும் கொல்லப்பட்டதாக கண்களால் கண்ட உரிய கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் காயப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சாட்சியங்களை அழிக்கும் நோக்குடன் காணாமலும் ஆக்கப்பட்டதாகவும் உயிர் தப்பியவர்களால் கூறப்படுகின்றது.

இன்றுடன் இந்த மக்கள் கொல்லப்பட்டு 33 வருடங்கள் நிறைவு பெற்ற நிலையில் இப்படுகொலைகளுடன் தொடர்புபட்டவர்கள் இன்னும் நீதிக்கு முன் நிறுத்தப்படாமல் இருப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது.

இதன் காரணமாக உரிய பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களும் நலன்விரும்பிகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் பெறவேண்டும் என வலியுறுத்தி இன்றைய நாளில் (ஓகஸ்ட் 12) வருடா வருடம் இலங்கை தேசத்திற்கும் சர்வதேசத்திற்கும் வலியுறுத்திய வகையில் நினைவேந்தல்களை பல வகையான சவால்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் மேற்கொண்டு வருகின்றோம்.

எனவே இலங்கை அரசாங்கமானது இவ்வாறான சம்பவங்களுக்கு முழுமையாக பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருக்கின்று என்பதனை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம்.

குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த யுத்த காலப்பகுதிகளில் இது போன்ற படுகொலைகள் தழிழர் பகுதிகளில் பல இடங்களில் இடம்பெற்றிருக்கின்றது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு மயிலந்தனை படுகொலை மற்றும் திருகோணமலை குமாரபுரம் படுகொலை ஆகியவற்றிற்காக இலங்கை நீதி மன்றங்களில் கண்கண்ட சாட்சியங்களுடன் வழக்கு தாக்கல்கள் மேற்கொண்ட போதும் உரிய பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப் பெறாமல் மறுக்கப்பட்ட வேதனையான சம்பவத்தினையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

அதே போன்றே இன்றைய தினம்(2023.08.12) இம்மக்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் 33 ஆண்டு நினைவேந்தலினை மேற்கொள்ளப்பட்டது.

எனவே, வீரமுனை படுகொலை நடந்து இன்று 33ஆம் ஆண்டு நினைவு தினத்தில் மீளவும் நீதிக்காக தங்களிடம் கோரிக்கை வைக்கிறோம்-என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தொழிலற்றோரின் வீதம் கிழக்கிலும் அதிகரிப்பு!



மட்டக்களப்பு, ஓக. 15

மட்டக்களப்பு மாவட்டம் உட்பட முழுக் கிழக்கு மாகாணத்திலும் தொழிலற்றோர் வீதம் அதிகரித்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் தெரிவிக்கிறது.

மனித வலு வேலைவாய்ப்புத் திணைக்களம் மாவட்ட செயலக தொழில் நிலையம் அக்ஷன் யுனிற்றி லங்கா ஆகியவை இணைந்து மாவட்டத்தின் மாபெரும் தொழில் கல்விச் சந்தை மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுமார் 30இற்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வழங்கும் நிறுவனங்கள், அரச தனியார் துறை தொழிற் கல்வி நிறுவனங்கள் கலந்து கொண்டன.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடனடித் தொழில் வாய்ப்புக்களோடு இந்நிறுவனங்கள் இந்த தொழிற் சந்தையில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழில் கல்விச் சந்தையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாவட்ட செயலாளர் கலாமதி-

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2021ஆம் ஆண்டு 4 சதவீதமாக இருந்த தொழிலற்றோர் சதவீதம் இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 7.2 ஆக அதிகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் மொத்த தொழிலற்றோர் சதவீதம் 22 ஆக உள்ளது.

உயர்தரக் கல்வியை முடித்தவர்கள், பல்கலைக்கழகம் செல்லாத ஒரு தரப்பினர், சாதாரண தரத்தில் விடுபடுகின்ற தரப்பினர், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் இவ்வாறு பல தரப்பட்டவர்கள் வேலையற்று இருக்கிறார்கள்.

அரசாங்க உத்தியோகங்களை விட தனியார் தொழில் துறைகளில் அதிக வேலைவாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன.

தனியார் தொழில் துறையின் மூலம்தான் உண்மையான பொருளாதார அபிவிருத்தி அடைந்து கொள்ள முடியும். எனவே, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எல்லோரும் சிந்திக்க வேண்டும்-என்றார்.

# சிறுவர் சித்திர போட்டியில் செந்நெல் சாஹிரா சாதனை



காரைதீவு, ஓக. 15

அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டியில் சம்மாந்துறை வலயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சம்மாந்துறை செந்நெல் சாஹிரா மகா வித்தியாலயத்தில் இருந்து பங்குபற்றி வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் விழா கல்லூரியின் அதிபர் யு.எல். முஹம்மட் இஸ்மாயில் தலைமையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

விழாவில் பாடசாலையின் இணைப்பாளர் எம்.எம்.எம். ஜௌபர், சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தின் சித்திரப் பாட இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் முனாப், ஆசிரியையான ஜனாபா எஸ்.எல் ஜன்னத் முன்னிலையில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

(அ)

# கிழக்கில் முதல் தடவை சர்வதேச நீச்சல் பயிற்சி!

மட்டக்களப்பு, ஓக. 15

கிழக்கு மாகாணத்தில் இளைஞர்களுக்கு சர்வதேச நீச்சல் பயிற்றுனரினால் நீச்சல் பயிற்சி மட்டக்களப்பு வெபர் நீச்சல் தடாகத்தில் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை. ஆதம்லெப்பையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் சோல்வ் பவுண்டேசன் அனுசரணையில் நடைபெற்ற இப்பயிற்சி பாசறையின் பிரதான பயிற்றுனராக அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சிட்னி ஒலிம்பிக் பார்க் மைதானத்தின் பயிற்றுனர் பஞ்சரத்தினம் தம்பு இதன் போது கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.



கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட நீச்சல் பயிற்றுவிப்பாளர்கள், உயிர்க்காப்பு நீச்சல் கற்கை நெறியை நிறைவு செய்தவர்கள், மற்றும் நீச்சல் வீரர்கள் போன்றோருக்கு நீச்சல் தொழில் நுட்பங்கள், மற்றும் பயிற்சிகள் தொடர்பாக இதன் போது வளவாளரினால் பயிற்றுவிக்கப்பட்டன.

பயிற்சியில் கலந்து கொண்ட நீச்சல் வீரர்களுக்கு பெறுமதியான சான்றிதழ்கள் இதன்போது வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன், விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பல அதிகாரிகள் பங்கேற்றனர்.

சிறந்த நீச்சல் வீரர்களை உருவாக்குவதற்கு இப்பயிற்சிகள் உதவுவதுடன் எதிர் காலத்திலும் இவ்வாறான பயிற்சிகள் இடம் பெறவுள்ளதாக விளையாட்டு உத்தியோகத்தர்கள் இதன் போது தெரிவித்தனர்.

(அ)

போலந்து-பெலாரஸ் எல்லையில்

# இலங்கையர்கள் உட்பட 160 அகதிகள் சிக்கினர்!



வார்ஸோ, ஒக. 15

போலந்துக்கு செல்ல முற்பட்ட 160 அகதிகளை போலந்து மற்றும் பெலாரஸ் எல்லையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இவர்கள் இவர்கள் போலந்து எல்லை பாதுகாப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சோமாலியா, எகிப்து, எத்தியோப்பியா மற்றும் இலங்கையை சேர்ந்த அகதிகளே இவ்வாறு எல்லையை கடக்க முற்பட்டுள்ளனர்.

இவர்களை அழைத்துச் சென்ற குற்றச்சாட்டில் நான்கு சிரிய மற்றும் மூன்று பங்களாதேஷ் மற்றும் உக்ரைனிய பிரஜை ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக போலந்து எல்லை பாதுகாப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத எல்லைக் கடப்புகளுக்கு உதவியதற்காக இந்த ஆண்டு ஏற்கனவே 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறும் போலந்து பொலிஸார், கடந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு ஜனவரி வரையான காலப்பகுதியில் 16,000 முதல் 19,000 சட்டவிரோத குடியேற்றவாசிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

போலந்துக்குள் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் வருகை அதிகரித்து வருவதால் எல்லை பாதுகாப்புகளை பலப்படுத்த போலந்து அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், மேலதிகமாக 1000 எல்லை பாதுகாப்பு பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் போலந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(ஐ)

# ஏவுகணை உற்பத்தி அதிகரிக்கவேண்டும்

பியொங்யாங், ஒக. 15

இராணுவ சக்தியை பலப்படுத்தவும் போருக்குத் தயாராக இருப்பதற்கும் ஏவுகணை உற்பத்தியை அதிகரிக்குமாறு வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் உத்தரவிட்டுள்ளார்.

தென் கொரியாவும் அமெரிக்காவும் வருடாந்த இராணுவப் பயிற்சிகளுக்குத் தயாராகி வரும் நிலையில், வட கொரிய அரச ஊடகமொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் தந்திரோபாய ஏவுகணைகள், ஏவுகணை ஏவுதளங்கள், கவச வாகனங்கள் மற்றும் பீரங்கி குண்டுகளை உற்பத்தி செய்யும் முக்கிய ஆயுத தொழிற்சாலைகளை பார்வையிட்ட கொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

தென் கொரியா மற்றும் அமெரிக்காவின் இந்த இராணுவப் பயிற்சியை வடகொரியா ஒரு யுத்தத்திற்கான ஒத்திகையாக பார்க்கும் நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் விரிவாக்கப்பட்ட மற்றும் பலப்படுத்தப்பட்ட முன்னணி இராணுவப் பிரிவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஏவுகணை உற்பத்தியை வினைத்திறனான முறையில், அதிகரிப்பது முக்கிய இலக்காகும் என கிம் ஜோங் உன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாரியளவிலான பல ஏவுகணைகள் உள்ளிட்ட அவசரத் தேவை இருப்பதாகவும் அவர் கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யுக்ரைனுடனான போருக்கு வடகொரியா ஆயுதங்களை ரஷ்யாவுக்கு வழங்கவுள்ளதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு கடந்த மாதம் பியோங்யாங்கிற்கு விஜயம் செய்த போது வட கொரிய அதிகாரிகளுடன் யுக்ரைனில் அதன் போருக்காக மொஸ்கோவுக்கு வெடி மருந்துகளை விற்பனை செய்வதை அதிகரிப்பது குறித்து கலந்துரையாடியதாக அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகள் அறிவித்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

(அ)



# மாமியார் டயானாவை நினைவூட்டும் பிரித்தானிய இளவரசி கேட் மிடில்டன்

## அரச குடும்ப ஆதரவாளர்கள் நெகிழ்ச்சி

லண்டன், ஒக. 15

கேட் மிடில்டனுக்கு அரச குடும்ப ஆதரவாளர்கள் வைத்துள்ள புனைப்பெயர் இளவரசி டயானாவின் பெயரை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

பிரித்தானிய இளவரசர் வில்லியமுக்கும், கேட் மிடில்டனுக்கும் கடந்த 2011ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது.

திருமணத்திற்கு பிறகு பல்வேறு தொண்டு பணிகளில் கேட் ஈடுபட்டு வருகிறார்.

அண்மையில் கூட கேட், ஆரம்ப குழந்தை பருவத்திற்கான ரோயல் அறக்கட்டளை மையத்தைத் தொடங்கினார்.

இப்படி தொடர்ந்து சிறார்களுக்கான நலனில் தனி அக்கறை கொண்டு செயல்படும் கேட் மிடில்டனை 'த சில்றன் பிரின்சஸ்' என அரச குடும்ப ஆதரவாளர்கள் புனைப்பெயருடன் சமூகவலைதளங்களில் அழைக்கின்றனர்.

மறைந்த பிரித்தானிய இளவரசியும், கேட் மிடில்டனின் மாமியாருமான டயானாவுக்கு 'த பீப்பிள்ஸ் பிரின்சஸ்' என்ற புனைப்பெயர் கடந்த 1992 இல் சூட்டப்பட்டது.

இதையடுத்து கேட் மிடில்டனின் புனைப்பெயர், இளவரசி டயானாவை அனைவருக்கும் இனிமையான வகையில் நினைவூட்டுவதாக பலரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

(அ)

# சீனாவை உலுக்கும் மழை! நிலச்சரிவால் 22 பேர் பலி!!



பீஜிங், ஒக. 15

சீனாவில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது. இதனால் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வீதிகள், பாலங்கள், வீடுகள் என்பன சேதம் அடைந்துள்ளன.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி இருக்கிறது. வெள்ளத்தில் சிக்கிய ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் ஜியாங் மாவட்டம் ஹாஸ் என்ற பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் வீடுகள் இடிந்து பலர் உயிரோடு மண்ணுக்குள் புதைந்துள்ளனர். மீட்புப் படையினர் விரைந்து சென்று இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலச்சரிவில் சிக்கி உயிர் இழந்த 22 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. பலர் இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் என தெரிவித்துள்ள நிலையில் அவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதனால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் இருளில் மூழ்கி உள்ளதோடு, ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

(அ)

# இந்தியாவில் நிலவும் சீரற்ற காலநிலை!



புதுடில்லி, ஒக. 15

இந்தியாவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக உத்தரகண்ட மாநிலத்தில், மாத்திரம் 60இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 17இற்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், தெஹ்ரி, டோராடூன், பவுரி, சம்பவத், நைனிடால் மற்றும் உதம் சிங் ஆகிய மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்தப் பகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு நேற்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்தப் பகுதியில், ஆயிரத்து 169 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், ஏராளமான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை,எதிர்வரும் அடுத்த 24 மணி நேரத்திற்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் என சென்னை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சென்னை, எழும்பூர், பாரிமுனை, சேப்பாக்கம், வில்லிவாக்கம், சேத்துப்பட்டு உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்யும் என எதிர்வுக் கூறப்பட்டுள்ளது.

(அ)

ஈழநாடு





# எல். பி. எல். ரி - 20 தொடர் ஜெவ்னா கிங்ஸ் தோல்வி!

கொழும்பு, ஓக. 15

எல். பி. எல். என்று அழைக்கப்படும் லங்கா பிறீமியர் லீக் தொடரில் ஜெவ்னா கிங்ஸ் 5ஆவது தோல்வியைத் தழுவியது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற போட்டியில் ஜெவ்னா கிங்ஸை 89 ஓட்டங்களுக்கு சுருட்டிய காலி ரைட்டன்ஸ் 7 விக்கெட்களால் வெற்றியீட்டியது.

இந்த வருட லங்கா பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் ஜெவ்னா கிங்ஸ் பெற்ற இந்த எண்ணிக்கை அணி ஒன்றால் பெறப்பட்ட மிகக் குறைந்த மொத்த எண்ணிக்கையாகப் பதிவானது.

ஜெவ்னா கிங்ஸின் 4 பிரதான வீரர்களான நிஷான் மதுஷ்க, ரஹ்மானுல்லா குர்பாஸ், சொகைப் மாலிக், டேவிட் மில்லர் ஆகியோரது விக்கெட்களை கசூன் ராஜித கைப்பற்றி காலி ரைட்டன்ஸை இலகுவாக வெற்றிபெறச் செய்தார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெவ்னா கிங்ஸ் 20 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

எதிரணியின் பந்துவீச்சுகளை எதிர்கொள்ள முடியாமல் திணறிய ஜெவ்னா கிங்ஸ் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது.

நால்வர் மாத்திரம் இரு வரிசை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர். துனித் வெல்லாலகே (22), அணித் தலைவர் திசர பெரேரா (13), மஹீஷ் தீக்ஷன (13 ஆ.இ.), டில்ஷான் மதுஷன்க (12) ஆகியோரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

பந்துவீச்சில் கசுன் ராஜித 4 விக்கெட்களையும் லஹிரு குமார 2 விக்கெட்களையும் தப்ரெய்ஸ் ஷம்சி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

90 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி ரைட்டன்ஸ் 13.3 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

டிம் சீபேர்ட் 55 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ 15 ஓட்டங்களையும் சட் போவ்ஸ் ஆட்டம் இழக்காமல் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.

டிம் சீஃபேர்ட், சட் போவ்ஸ் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 48 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். (ஐ)

# இந்தியாவுடனான இருபது - 20 தொடர் மேற்கிந்தியா வசம்!

புளோரிடா, ஓக. 15

இந்திய கிரிக்கெட் அணிக்கு எதிரான இருபது - 20 தொடரை 3-2 என்ற கணக்கில் வென்றுள்ளது மேற்கிந்தியத் தீவுகள் அணி. 17 ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய அணிக்கு எதிராக தொடர் ஒன்றை மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றியுள்ளது.

தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் 5ஆவது இருபது -20 போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கு இந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் தொடரில் விளையாடியது. டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இந்தியா வென்றது. 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரின் முதல் 3 போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளிலும், கடைசி 2 போட்டிகள் அமெரிக்காவின் புளோரிடாவிலும் நடைபெற்றன.

முதல் 2 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது. அடுத்த 2 போட்டிகளை இந்திய அணி வென்றது. தொடரின் கடைசி போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 165 ஓட்டங்களை எடுத்தது அந்த அணி. அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ் 45 பந்துகளில் 61 ஓட்டங்கள் எடுத்தார். திலக் வர்மா 18 பந்துகளில் 27 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற அனைத்து துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.




166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை மேற்கிந்தியத் தீவுகள் அணி விரட்டியது. 10 ஓட்டங்களில் கைல் மேயர்ஸ் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் நிக்கோலஸ் பூரன் மற்றும் பிரண்டன் கிங் இணைந்து 107 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். பூரன், 35 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்து திலக் வர்மா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

18 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்து மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது. அதன் மூலம் தொடரையும் வென்றது. இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த கிங், 55 பந்துகளில் 85 ஓட்டங்கள் எடுத்திருந்தார். தொடரில் சிறப்பாக செயல்பட்ட நிக்கோலஸ் பூரண் தொடர் நாயகன் விருதை வென்றார். (ஐ)

# உலகக் கிண்ண உதைபந்து; அரையிறுதி இன்று ஆரம்பம்!

ஒக்லாந்து, ஓக. 15

பிபா மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதல் அரையிறுதி போட்டியில் சுவீடன், ஸ்பெயின் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

மகளிருக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் நடைபெறுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த முதல் இரண்டு காலிறுதி போட்டிகளில் நெதர்லாந்தை வீழ்த்தி ஸ்பெயின் அணியும், ஜப்பானை வீழ்த்தி சுவீடன் அணியும் அரையிறுதிக்கு முன்னேறின.

இந்நிலையில், சனிக்கிழமை நடந்த 2 காலிறுதி போட்டிகள் நடைபெற்றன. முதல் காலிறுதி போட்டியில் அவுஸ்திரேலியா - பிரான்ஸ் அணிகள் மோதின. இதில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

மற்றொரு காலிறுதி போட்டியில் இங்கிலாந்து - கொலம்பியா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் முதல் அரையிறுதி போட்டி



நியூசிலாந்தின் ஒக்லாந்து நகரிலுள்ள ஈடன் பார்க் மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் ஸ்பெயின்- சுவீடன் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

நாளை புதன்கிழமை நடைபெறும் 2ஆவது அரையிறுதி போட்டியில் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன.

3ஆவது மற்றும் 4ஆவது இடத்துக்கான போட்டி சனிக்கிழமையும் இறுதிப் போட்டி ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. (ஐ)

## எல். பி. எல். இருபது - 20

# பிளே ஓவ் வாய்ப்பை தக்கவைத்தது கொழும்பு

கொழும்பு, ஓக. 15

பி லவ் கண்டி அணிக்கு எதிராக 8 ஓட்டங்களால் மிகவும் பரபரப்பான வெற்றியை கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி பதிவு செய்தது. இந்த வெற்றியால் பிளே ஓவ் சுற்றில் விளையாடுவதற்கான வாய்ப்பை அந்த அணி தக்கவைததுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

கடந்த சில போட்டிகளில் சிறப்பாக பந்துவீசி வரும் அஞ்சலோ மத்தியூஸ், இந்தப் போட்டியிலும் சிறப்பாக பந்துவீசி பாபர் அஸாம் (9), லஹிரு உதார (1) ஆகியோரின் விக்கெட்களை குறைந்த எண்ணிக்கைகளுக்கு வீழ்த்தினார்.

எனினும், பதும் நிஷங்க, நிப்புன் தனஞ்சய ஆகிய இருவரும் 3ஆவது விக்கெட்டில் 69 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை ஓரளவு நல்ல நிலையில் இட்டனர். பதும் நிஷங்க 51 ஓட்டங்களையும் நிப்புன் தனஞ்சய 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

மொஹமத் நவாஸ் (21), சாமிக கருணாரட்ன (17), நுவனிது பெர்னாண்டோ (15) ஆகியோரும் அணியின் மொத்த எண்ணிக்கைக்கு பலம் சேர்த்துக்கொடுத்தனர்.

பந்தவீச்சில் வனிந்து ஹசரங்க 21 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 23 ஓட்டங்க



ளுக்கு 2 விக்கெட்களையும் இசுரு உதான 40 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பி லவ் கண்டி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

பவர் பிளே நிறைவடைவதற்குள்ள மொஹமத் ஹரிஸ் (1), சஹான் ஆராச்சிகே (13) ஆகிய இருவரும் ஆட்டம் இழந்ததுடன் பக்கார் ஷமானும் 13 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அணித் தலைவர் வனிந்து ஹசரங்க 21 பந்துகளில் 40 ஓட்டங்களை குவித்த அணிக்கு சிறு உற்சாகத்தைக் கொடுத்தார். ஆனால், அஞ்சலோ மத்தியூஸ் (11), சதுரங்க டி சில்வா (16), ஆகிய இருவரும் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தது அணிக்கு தடுமாற்றத்தைக் கொடுத்தது.

அசிப் அலி (33), அஷேன் பண்டார (22) ஆகிய இருவரும் 7ஆவது விக்கெட்டில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 138 ஓட்டங்களாக உயர்த்தினர். அஷேன் பண்டாரவின் ஆட்டமிழப்பை தொடர்ந்து கொழும்பு அணியின் வெற்றி உறுதியானது.

# உலகின் தலைசிறந்த வீரர் பாகிஸ்தானின் பாபர் அஸாம்

## இந்தியாவின் கோலி புகழாரம்

மும்பை, ஓக. 15

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பாபர் அஸாம் என இந்திய அணியின் விராட் கோலி புகழ்ந்துள்ளார்.

“கடந்த 2019 ஒருநாள் உலகக் கிண்ணக கிரிக்கெட் தொடரின் போது தான் பாபர் அஸாமுடன் முதன்முதலில் பேசி இருந்தேன். அந்த சந்திப்பு இமாத் வாசிம் மூலம் நடந்தது. அவரை நான் 19 வயது பிரிவில் கிரிக்கெட் விளையாடிய நாட்களில் இருந்தே அறிவேன். ‘பாபர் உங்களை சந்திக்க விரும்புகிறார்’ என இமாத் தெரிவித்தார். மன்செஸ்டர் போட்டிக்கு பிறகு பாபர் அஸாமுடன் பேசினேன். அவர் வெளிக்காட்டும் மரியாதையில் துளியும் இன்றுவரை மாற்றமில்லை.

அவரின் ஆட்டத்தை விரும்பிப் பார்ப்பேன். அனைத்து வடிவங்களிலும் உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரராக அவர் திகழ்கிறார்” என கோலி தெரிவித்துள்ளார். (ஐ)

# கிளிநொச்சியில் சிறுமிகள் மீது 106 வன்புணர்வுச் சம்பவங்கள்!

## மருத்துவ அறிக்கை தாமதத்தால் நீதி வழங்குவதில் சிக்கல்

கிளிநொச்சி, ஓக. 15

**கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 106 சம்பவங்களின் மருத்துவ அறிக்கைகள் கிடைக்கப் பெறாமையால், அது தொடர்பில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்பனவற்றில் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 106 சம்பவங்கள் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை வழங்கப்படவில்லை. சட்ட மருத்துவ அதிகாரிகள் மாற்றலாகிச் சென்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கை தொடர முடியாத நிலைமை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தபட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். எனவே, 31ஆம் திகதி முன்னர் அனைத்து அறிக்கைகளும் கிடைக்கப்பெறும்." - என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 106 சம்பவங்களின் மருத்துவ அறிக்கைகள் கிடைக்கப் பெறாமையால், அது தொடர்பில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்பனவற்றில் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 3 ஆண்டுகளாக சிறுமிகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 106 சம்பவங்கள் தொடர்பில் சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை வழங்கப்படவில்லை. சட்ட மருத்துவ அதிகாரிகள் மாற்றலாகிச் சென்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அந்த அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இதன் காரணமாக சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கை தொடர முடியாத நிலைமை இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தபட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். எனவே, 31ஆம் திகதி முன்னர் அனைத்து அறிக்கைகளும் கிடைக்கப்பெறும்."-என்றார்.

# பாலியல் துஷ்பிரயோக விசாரணை சரியாக இடம்பெறுமா என சந்தேகம்

கொழும்பு, ஓக. 15

இலங்கை பாராளுமன்றத்தின் பெண் ஊழியர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தொடர்பான உள்ளக விசாரணையின் வெற்றி குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சந்தேகம் எழுப்பியுள்ளார்.

பாராளுமன்ற மகளிர் மன்றத்தின் சார்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன, பாராளுமன்றத்தின் நிர்வாகப் பிரிவு பெண்களிடமிருந்து முறைப்பாடுகளை மீளப் பெறுவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

"இவ்வாறு பாலியல் தொல்லைகள் இடம்பெறவில்லையென அச்சுறுத்தி கடிதங்களில் கையெழுத்து பெறப்படுகின்றன ஆகவே இந்த விசாரணை சரியாக இடம்பெறுமா என அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது."

சில மேலாளர்களால் இந்தப் பெண்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீரவினால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற பணிப்பாளர் (நிர்வாகம்) ஜி. தச்சன ராணி தலைமையிலான இந்தக் குழுவில் ஹன்சார்ட் ஆசிரியர் சி. என்.எல்.டி சில்வா மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) இந்திரா திஸாநாயக்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

பெண்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன பாராளுமன்றத்தில் பொதுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# நான்கு கஞ்சா தோட்டங்கள் தனமல்விலவில் முற்றுகை!

கொழும்பு, ஓக. 15

தனமல்வில ஹம்பேகமுவ பகுதியில் சட்ட விரோதமான முறையில் தனியாருக்குச் சொந்தமான 4 காணிகளில் கஞ்சா பயிர்செய்கையில் ஈடுபட்டிருந்த மூவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அத்துடன் குறித்த காணிகளில் காணப்பட்ட அனைத்து கஞ்சா செடிகளையும் பொலிஸார் அழித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கைது செய்யப்பட்டவர்களையும் சான்றுப் பொருளாக கஞ்சா செடிகளையும் தம்மிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதாகவும் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஹம்பேகமுவ பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# 95ஆயிரம் ரூபா ஏலத்தில் விற்கப்பட்ட மாம்பழம்!

வவுனியா, ஓக. 14

வவுனியா, தவசிக்குளம் சிறீ விநாயகர் ஆலயத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட பூசையின் பின்னர் இறைவனுக்கு படைக்கப்பட்ட மாம்பழம் ஒன்று ஏலத்தில் 95000 ரூபா விற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இக்கோவிலில் விசேஷ நாட்களில் நடக்கும் பூசைக்கு பின், பூசைக்கு வழங்கப்படும் பழங்கள் உள்ளிட்ட பல பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.

எனினும், அதிக விலைக்கு மாம்பழம் ஒன்று விற்பனையானது இதுவே முதல் முறை ஆகும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

விடுமுறையை களிப்பதற்காக லண்டனில் இருந்து வவுனியா வந்துள்ள கோவிலை அண்மித்த வீடொன்றில் வசிக்கும் ஒருவர் இந்த மாம்பழத்தை கொள்வனவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல் நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது எம்.கே. சிவாஜிலிங்கம் உயிரிழந்த மாணவிகளுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.



கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வள்ளிபுனம் கிராமத்தில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது வான் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 63 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சஜித் கூட்டணியில் டலஸ் அணி சங்கமம்!

## பேச்சுகள் ஆரம்பம்!!

கொழும்பு, ஓக. 15

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையினரை, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன என்று தெரியவருகின்றது.

இரு தரப்பில் இருந்தும் இதற்காக பேச்சு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது.

இதற்கான நடவடிக்கை இடம்பெறுகின்றது என்பதை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார். சஜித் தலைமையில் எதிர்காலத்தில் அமையவுள்ள பரந்தபட்ட கூட்டணியில் டலஸ் அணி இணையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

## செஞ்சோலை...

பல்கலைக்கழகம், வடமராட்சி - வல்வெட்டித்துறை மற்றும் யாழ். பொது நூலக பகுதி ஆகிய இடங்களில் இந்த நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த 2006 ஓகஸ்ட் 14ஆம் திகதி முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - வள்ளிபுனம் கிராமத்தில் செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் படைகள் நடத்திய விமானத் தாக்குதலில் 63 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி)

(மேலும் செய்திகள் உள்ளே)

## இளைஞரை...

நாட்களாக தேடியும் நேற்றுவரை இவர் கிடைக்கவில்லை. இந்நிலையில், அவரை கண்டுபிடிக்க உதவுமாறு குடும்பத்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர் பற்றிய தகவல் தெரிந்தால் 077 720 8644 என்ற இலக்கத்துக்கு அறியத் தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் கடந்த 11ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## 13ஐ...

ச   பைத் தேர்தலை நடத்தவும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலங்கை தமிழரசு கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், நாம் விவரித்துள்ளபடி, தமிழ் மக்களின் அபிலாசைகளின் அடிப்படையிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசுகளால் தீர்வுக்காக வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளுக்கு இணங்கவும் தமிழ்த் தேசியப் பிரச்னைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்கவும் ஜனாதிபதியாகிய தங்களைக் கோருகின்றோம் - என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டை தமக்கு தெரிவிக்குமாறு ஜனாதிபதி அண்மையில் கோரியிருந்தார். இதற்கான காலக்கெடு இன்றைய தினத்துடன் முடிவடைகிறது. இந்த நிலையிலேயே சம்பந்தன் தமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் நேற்றைய தினம் 5 பக்கங்கள் கொண்ட கடிதத்தை வழங்கி வைத்தார்.

மேலும், அந்தக் கடிதத்தில், சுதந்திரம் பெற்ற காலம் முதல் - குறிப்பாக 1956 முதல் - தமிழர்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தங்கள் அபிலாசை என்பதை எல்லா தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடையில் அவர்கள் தனிநாட்டு கோரிக்கையையும் வலியுறுத்தினர் என்பதும் கூறப்பட்டுள்ளதுடன், அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தேசிய இனப் பிரச்னை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாசைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் முயற்சிகள் இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. 1983 முதல் இந்த விடயத்தில் இந்தியா வழங்கி வரும் பங்களிப்பும் இதில் விவரிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாசைகளின் உள்ளக் கிடக்கைகளை புரிந்து அவற்றுக்கு இணங்கவும், பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்கு காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும் தமிழரின் தேசிய இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்க வேண்டும்

## டிப்பர்...

கடக்கும் நோக்கில் வேகமாக பயணிக்க முனைந்தது. அந்தச் சமயம் முன்னால் நின்ற மோட்டார் சைக்கிளை மோதியது.

இதில், நிலைதடுமாறி கணவர் ஒரு புறமும் மனைவி ஒருபுறமும் விழுந்துள்ளனர். ஆனால், தொடர்ந்தும் முன்னே சென்ற டிப்பரின் சில்லுக்குள் அகப்பட்டு பெண் நசியுண்டு படுகாய மடைந்தார்.

அவரை மீட்ட பொதுமக்கள் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். ஆனால், அங்கு அவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சோதனையில்...

தயாரிக்கப்பட்டவை, 17 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை, மற்றவை பாகிஸ்தான், ஜப்பான் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து வந்தவை.

0தரப் பரிசோதனையில் தோல்வியடைந்தன என்று கண்டறியப்பட்ட மருந்துகளில், சில திரும்பப் பெறப்பட்டன அல்லது நிறுத்தப் பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, 2017 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் 585 தரக் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான 96 வழக்குகள் பதிவாகியுள்ளன, 2022 ஆம் ஆண்டில் 86 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்தன என்று தெரிய வருகின்றது. (ஐ)

## ஜனாதிபதியை...

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். இருப்பினும், ஜனாதிபதியின் அரசியல் - பொருளாதார கொள்கைக்கும் எமது அரசியல் - பொருளாதாரக் கொள்கைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

69 இலட்சம் மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி மாற்றத்தை தோற்றுவித்தார்கள். பொய்யான போராட்டத்தால் துரதிர்ஷ்டவசமாக மக்களாணை பலவீனப் படுத்தப்பட்டது.

ராஜபக்ஷர்கள்மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக பாராளுமன்றம் ஊடாக அரசமைப்புக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம்.

போராட்டத்துக்கு முகம் கொடுத்த அனுபவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு. 'படலந்த'சம்பவம் (1989இல் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ் சித்ரவதைகள் நடைபெற்ற முகாம் சம்பவம்) தொடர்பில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நாங்கள் மாற்றிக் கொள்ளவில்லை.

நெருக்கடியான சூழலில் அரசாங்கத்தை பொறுப்பேற்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வரவில்லை.

ராஜபக்ஷர்கள் மீது மக்கள் கொண்ட நம்பிக்கையை பாதுகாப்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். நாட்டுக்கு எதிரான அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுத்தால் அதை கடுமையாக எதிர்ப்போம் என்பதை உறுதியாகக் கூறுகிறோம் - என்றார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாத்தளை - தம்புள்ளை - பாத்ததும்பர பிரதேசத்தில் பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# மீண்டும் குருந்தூர்மலை வருகின்றார் கம்மன்பில!

கொழும்பு, ஓக. 15

எதிர்வரும் 21ஆம் திகதி குருந்தூர் மலை தாம் செல்லவுள்ளேன் என்று பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அறிவித்துள்ளார்.

குருந்தூர்மலை விகாரை சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்த விடயங்கள் பொய்யானவை என்பதை ஒப்புவிப்பதற்காகவே தான் குருந்தூர்மலை செல்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

குருந்தூர்மலை விகாரை உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள தொல்லியல் இடங்களைப் பாதுகாக்க வேண்டியிருப்பது பிரிவினைவாதிகளிடமோ, அடிப்படைவாதிகளிடமோ இருந்து அல்ல. தற்போதைய அரசாங்கத்திடம் இருந்தே அவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

வரலாறு பற்றிய துளியும் அறிவில்லாத, தம்மை அறிவாளிகள் என்று காட்டிக்கொள்ளும் நபர்களிடம் இருந்து எமது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். வடக்கு,கிழக்கில் தொல்லியல் இடங்கள் அழிக்கப்பட்டுள்ளமை குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்குமாறு கோரி நாங்கள் எதிர்வரும் 19ஆம் திகதி சபாநாயகரிடம் யோசனை ஒன்றை கையளிக்கவுள்ளோம்.

கிழக்கில் தொல்லியல் முக்கியத்துவமிக்க 27 இடங்கள் இருப்பதாக அறிவித்திருந்தார். தற்போது தொல்லியல் பெறுமதிமிக்க இடங்கள் அதனை விட அதிகரித்துள்ளன. இவை அழிவுக்கு உட்படுத்துவதற்காக அரச அதிகாரிகள் நீதிமன்றங்களில் பொய்யான



அறிக்கைகளை வழங்கி வருகின்றனர்.

தொல்லியல் திணைக்களம் மற்றும் வன பாதுகாப்பு அதிகாரிகள் கடமைகளைச் செய்ய முயற்சிக்கும் போது பிரிவினைவாதிகளான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு தடையேற்படுத்துவதாக எங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. அமைதியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால், ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளராக சாணக்கியன் எம். பியையும் கலாசார அமைச்சராக எம். ஏ. சுமந்திரனையும் நியமிக்கவும் வாய்ப்புள்ளது.

ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த காலங்களிலேயே வடக்கு, கிழக்கில் உள்ள தொல்லியல் இடங்கள் அழிக்கப்பட்டன. இதனால், அவர் தலைமை தாங்கும் அரசாங்கத்திடம் தொல்லியல் இடங்களைப் பாதுகாக்க ஒப்படைப்பது, நரியிடம் கோழியை வழங்கியமைக்கு ஈடானது எனவும் அவர் கூறினார். (ஐ)

## பெண்கள்...

வருமாறு,

மன்னார் மாவட்டத்தில் பெண்களுக்கு எதிராக ஆண்டுக்கு 23இற்கும் அதிகமான துன்புறுத்தல்கள், சீண்டல்கள், வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகின்றன.

2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையான 8 வருட காலப் பகுதியில் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு எதிரான 113 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்தக் குற்றங்களுடன் தொடர்புடைய 113 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையில் 31 வன்புணர்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

2015, 2016, 2017 ஆகிய மூன்று ஆண்டுகளில் தலா ஒன்று என இடம்பெற்ற வன்புணர்வு சம்பவங்கள் 2018 இல் 4 ஆகவும் 2019இல் 5 ஆகவும் 2020இல் 4 ஆகவும் 2021இல் 11ஆகவும் காணப்பட்டன. இதேபோன்று, 2022 இல் 4 சம்பவங்களும் 2023இல் முதல் 6 மாத காலத்தில் 3 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இதேசமயம், 2015இல் 16 பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களும், 2016இல் 17, 2017இல் 17, 2018இல் 16, 2019இல் 8, 2020இல் 11, 2021இல் 7 2022இல் 15 துன்புறுத்தல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் 6 துன்புறுத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதேநேரம், இவ்வாறான வன்முறை சம்பவங்களுக்க இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை, யுத்தத்தால் ஏற்பட்ட உளப் பிரச்னைகளும் காரணம் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஐ)

## குருந்தூர்மலை...

14ஆம் திகதி ஆதி சிவன் ஆல யத்தில் பொங்கல் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இந்தப் பொங்கலை தடுக்குமாறு குருந்தூர்மலை ரஜமகா விகாரை பிக்கு விடுத்த அழைப்பின்பேரில் கூடிய பெரும்பான்மையினத்தவர்களும் பொலிஸாரும் பொங்கலை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

ஆலயம் தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு வழக்கு நடந்து வரும் நிலையில் கடந்த 8ஆம் திகதி நகர்த்தல் பத்திரம் மூலமாக பொங்கலை நடத்த அனுமதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசாங்க...

பின்னணியிலும் ஊழல் மோசடி முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை.

சுங்க திணைக்களம், மதுவரி, மோட்டார் வாகன பதிவாளர், தேசிய இறைவரி, புகையிரத திணைக்களம் ஆகிய வற்றில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை குறைந்தபட்சமேனும் நிவர்த்தி செய்தால் நாட்டு மக்கள் மீது வரி சுமையை சுமத்த வேண்டிய தேவை ஏதுமில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன குறிப்பிடுகிறார்.

ஊழல் மோசடியை இல்லாதொழிக்க நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் மக்கள்மீது வரி விதிப்பு மனசாட்சி இல்லாமல் சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் தவறான தீர்மானத்தால் உடவளவை வலய விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகள் வீழ்ச்சியடைந்தால் அதன் தாக்கத்தை ஒட்டுமொத்த மக்களும் எதிர்கொள்கிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சரவைக்கும் இடையில் இணக்கப்பாடற்ற தன்மை காணப்படுகிறது. வெகுவிரைவில் அரசாங்கத்துக்குள் புதிய எதிரணி ஒன்று தோற்றம் பெறும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 39 இலட்சம் மக்களுக்கு உணவு பாதுகாப்பில்லை

## யுனிசெவ் அறிக்கையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 15

இலங்கையில் 39 இலட்சம் பேர் உணவுப் பாதுகாப்பின்மையால் அவதிப்படுவதாகவும் 10 ஆயிரம் குடும்பங்கள் கடும் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளுக்கான சிறுவர் நிதியம் (யுனிசெவ்) தெரிவித்துள்ளது. மேலும் நாட்டில் 29 இலட்சம் குழந்தைகளுக்கு உயிர்காக்கும் ஊட்டச்சத்து, சுகாதாரம், கல்வி, குடிதண்ணீர், சமூகப் பாதுகாப்புக்குரிய உதவி தேவைப்படுவதாகவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கான முதலாம் கள அறிக்கையை வெளியிட்டுள்ள யுனிசெவ், இவ்விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளது.

பெருந்தோட்டத்துறை சமுதாயம் உணவுப் பாதுகாப்பின்மையால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் சமுர்த்தி மற்றும் ஊனமுற்றோர் நலன் கொடுப்பனவு ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையிலானோர் தங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 62 வீதமான மக்கள் சேமிப்பை மீளப்பெறல், கடன் வாங்குதல், வாழ்வாதார அடிப்படையிலான சமாளிப்பு உத்திகளைக் கையாள்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாய உபகரணங்களை விற்பனை செய்தல், உற்பத்திக்குரிய சொத்துகளை விற்பனை செய்தல், கல்விச் செலவுகளை குறைப்பதற்காக குழந்தைகளை பாடசாலைகளிலிருந்து இடைவிலக்குதல் போன்றவற்றை மேற்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம் ஐந்து வயதுக்குக் குறைவான எடைகுறைந்த குழந்தைகளின் வீதம் 15.8 வீதமாக காணப்படுகிறது. இது கடந்த வருட ஏப்ரல் மாதத்தில் 13.1வீதமாக காணப்பட்டுள்ளது.

(அ)

# நம்பிக்கையில்லா பிரேரணை; தமிழ்க் கூட்டமைப்பும் ஆதரவு

கொழும்பு, ஓக. 15

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதென அறியமுடிகின்றது.

குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை செப்ரெம்பர் முதல் வாரத்தில் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்கனவே தீர்மானித்துள்ளது. (அ)

# இன்று மடு செல்கிறார் ரணில்

கொழும்பு, ஓக. 15

மன்னார் மடுத் திருத்தலத்தில் இன்று நடைபெறும் திருவிழா திருப்பலியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் மடு திருத்தல விஜயத்தை ஒட்டி மடு திருத்தலத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் பலரும் இன்று மடுத் திருத்தலத்துக்கு வருகை தர உள்ளமையினால் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ)

# பொலிஸார் வேண்டாம் இராணுவமே வேண்டும்

## கற்கோவளத்தில் போராட்டம்





யாழ்ப்பாணம், ஓக. 15

“பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. எனவே எமது பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம்” எனத் தெரிவித்து யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம் பகுதி மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள 4 ஆவது சிங்க றெஜிமென்ட படையணி இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரியே இவ்வாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது “பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. பொலிஸார் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில்லை இராணுவத்தின் மீதே எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. தனியார் காணியில் உள்ள இராணுவ முகாமை மாற்றுவதாக இருந்தால், அரச காணியில் உள்ள இரா ணுவ முகாமை அமையுங்கள்” எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(அ-02)

# மேர்வினுக்கு எதிராக சட்டம் பாயவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 15

“தமிழரின் தலையை கொய்து வருவேன் என கொக்கரிக்கும் மேர்வின் சில்வாவுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்த சங்கதி. கூடவே ராஜபக்ஷ குடும்பத்தை திருடர்கள், தரகு பணம் பெற்றவர்கள் என்கிறார். அந்த குடும் பத்துடனேயே மேர்வின் சில்வா குடும்பம் நடத்தினார் என்பதும் நாடறிந்த சங்கதி. ஒருவேளை அத்தகைய திருட்டு தரகு பணம் பெரும் பிரச்னையால், ராஜபக்ஷர்களுடன் நடத்திய குடும்பம் பிரிந்ததோ என்ற கேள்வியும் எப்போதும் இந்நாட்டு மக்கள் மனங்களில் இருக்கும் சங்கதி. எல்லாவற்றையும் மிஞ்சிய உலகமகா கேலிகூத்து என்னெவென்றால் உலகத்துக்கு பௌத்தத்தை போதித்த போதிசத்துவர் பெயரில் இவர் தமிழர்களின் தலையை வெட்டுவாராம். இவரை போன்றவர்களிடமிருந்து பௌத்தை போதிசத்துவர் தான் மீண்டும் பிறந்து வந்து காப்பாற்ற வேண்டும்.”

-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது;

முன்னையை ராஜபக்ஷ ஆட்சி காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் இவர் சொன்னார். அப்புறம் அரச ரூபவாஹிணி கூட்டுத்தாபனத்துக்கு சென்று தன் தலையையே உடைத்துக்கொண்டு வந்தார். பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார்.

நாட்டில், விகாரைகளையோ, கோவில்களையோ, பள்ளிகளையோ, தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூசைகளை செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதை சட்டப்படி அணுக வேண்டும். அந்த சட்டமும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

தமிழர் தலைகளை கொய்து வருவேன் என்ற இப்படி தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது. இவரை பாரதூரமானவராக எடுக்க தேவையில்லை. ஆனால், இவரது கருத்து, பாரதூரமானது. நாட்டில் இன மத குரோதத்தை உருவாக்கும் கருத்து. இவருக்கு எதிராக சட்டம் பாய வேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுபற்றி தங்கள் தலைவர்களான ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் புகார் செய்ய வேண்டும்-என்றார். (அ)

# ‘13’ஐ பற்றி பேசுவதற்கு இது உகந்த நேரமல்ல!

## ஜனாதிபதியிடம் கூறியது பெரமுன

கொழும்பு, ஓக. 15

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், பொதுஜன பெரமுன கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

’13’ பற்றியெல்லாம் பேசுவதற்கு இது உகந்த நேரம் அல்ல.” - எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மொட்டு கட்சியின் சார்பில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் இந்த கோரிக்கையை விடுத்தார்.

“நாடு இன்னும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவில்லை. எனவே, பொருளாதார மீட்சி, ஜனநாயக பலப்படுத்தல் ஆகிய இரு விடயங்களையே நாட்டு மக்கள் ஜனாதிபதியிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். இதற்கே ஜனாதிபதி முதலிடம் வழங்க வேண்டும். மாறாக ’13’ பற்றியெல்லாம் பேசுவதற்கு இது உகந்த நேரம் அல்ல.” - எனவும் சாகர காரியவசம் சுட்டிக்காட்டினார். (அ)

# கடத்தப்பட்ட வர்த்தகர் பலாங்கொடையில் மீட்பு

கொழும்பு, ஓக. 15

வெயாங்கொடை பகுதியில் கடத்தப்பட்ட வர்த்தகர் ஒருவர் பலாங்கொடை பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

நபர் ஒருவரிடம் 50 இலட்சம் ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு நீண்ட காலமாக மீள செலுத்தாமையினால் பணம் கொடுத்தவரினால் வர்த்தகர் கடத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் கடத்தியவரால் வர்த்தகரின் சகோதரிக்கு தொலைபேசி அழைப்பொன்று ஏற்படுத்தப்பட்டு, பணத்தை செலுத்தாவிட்டால் கொலை செய்யப்போவதாகவும் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாய் பணத்தை குறித்த வர்த்தகர் கடனாக பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் நீண்ட காலமாக அவர் மீளச் செலுத்தாது ஏமாற்றிய நிலையே கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தலுடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகியுள்ளதுடன் அவரை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.